விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆனி 25 துல்ஹஜ்ஜா 12 இதழ் 138

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 9-7-1987

# இலங்கையின் அழைப்புக்களை இந்தியத் தூதரகம் ஏற்காது

## மட்டுநகர் சென்ற குப்தாவுக்கு ஏற்பட்ட அநுபவத்தின் விளைவு

(கொழும்பு)

மட்டக்களப்பு காளிமடு பிள்ளையார் கோவில் திருவிழாவில் 17 அப்பாவித்தமிழ்மக்களை விசேட அதிரடிப் படையினர் சுட்டுக்கொன்றதாக வெளி வந்த செய்திபற்றிய உண்மைகளை அறிவதற்காக இலங்கை அரசினல் மட்டக்களப்புக்கு அழைத்துச்செல்லப்பட்ட இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் காப்டன் குப்தா சுதந்திரமாக உண்மைகளை உறுதிசெய்யஇலங்கைஅதிகாரிகளால்அனுமதிக்கப்படவில்லை, எனவே எதிர்காலத்தில் இது போன்ற இலங்கை அரசின் அழைப்புக்களுக்கு இந்தியத் தூதரகம் செவிசாய்க்காது.

இவ்வாறு இலங்கையிலுள்ள இந்தியத்தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் தெரிவித்தார்.

இலங்கைஅரசு மட்டக்களப்புக்கு அனுப்பிவைத்தஇந்தியத்

(5ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னை விவகாரம்:

# 7 நாட்டு நல்லெண்ணக் குழு இன்று இலங்கை வரும்

[லண்டன்]

இலங்கை இனப்பிரச்னைக்கு சமாதான தீர்வை வற்புறுத்தும் நோக்குடன் டாக்டர் அறம் தலைமையிலான ஏழு நாட்டு உறுப்பினர்களடங்கிய நல்லெண்ண தூதுக்குழுவொன்று இன்று இலங்கைவர வுள்ளது.

இக்குழுவில் இந்தியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, நேபாளம், தாய்லாந்து, ஜப்பான், கொரியா நாட்டு உறுப்பினர்கள் அடங்குவர்.

இனப்பிரச்னைக்கான தீர்வு குறித்து இக்குழுவினர் ஆளும் கட்சி, எதிர்க்கட்சிஉறுப்பினர்களையும் மற்றும் சம்பந்தப்பட்ட குழுக்களையும் சந்தித்துப் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

## பூரி மீண்டும் இன்று வருவார்

(நமது நிருபர்)

இந்திய உயர்ஸ்தானிகராலய செயலாளர் திரு எஸ் எச் பூரி மீண்டும் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலி வரவுள்ள திரு பூரி 'ஐலண்ட் பிரைட்' கப்பலிலிருந்து இறக்கப்படவுள்ள இந்திய நிவாரணப் பொருள்களை கண்காணிக்கும்பொருட்டு மாகவே வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ் குடா நாட்டு மக்களுக்கு 800 தொன் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு நேற்றுக்காலை சென்னை துறைமுகத்திலிருந்து



புறப்பட்ட 'ஐலண்ட் பிரைட்' என்னும் இந்திய கப்பல் இன்று காலை காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

● ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்மீது

# இராணுவம் துப்பாக்கிச் சூடு: கர்ப்பிணி உட்பட நால்வர் பலி

## மன்னாரில் துயரச் சம்பவம்

(நமது நிருபர்)

**அடம்பனிலிருந்து மன்னார் நோக்கி கவச வாகனங்கள், புல்டோசர்கள் சகிதம் கால்நடையாக ரோந்து சென்ற படையினர் வீதியின் இரு மருங்கிலும் தொடர்ச்சியாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கர்ப்பிணிப் பெண் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பலியானார்கள்.**

நேற்றுக்காலை ஆறு மணியளவில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் திருமதி தங்கம்மா (59 வயது) எஸ். கதிரவேலு (45 வயது) இவரது கர்ப்பிணி மனைவியான திருமதி க. நாகேஸ்வரி (38 வயது) இவரது மகனான க. சிவானந்தம் (7 வயது) ஆகியோரே பலியானவர்களாவர்.

இராணுவத்தினர் ரோந்து வந்துகொண்டிருந்த சமயம் இந்த நால்வ நம்வீட்டில்தேநீர் அருந்தியவண்ணமிருந்தனர் என்றும் இவர்களை நோக்கி இராணுவத்தினர் சரமாரியாக மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தைவடுத்து இந்த

(5ம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை குறைப்பு

[அலுவலக நிருபர்]

யாழ் குடாநாட்டில் எரிபொருள்களின் விலை இன்று முதல் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், வியாழன்,

நாவற்குழி யாழ்.கோட்டை ஆகிய இருஇராணுவமுகாமிலிருந்தும் பொதுமக்கள் வாழும பகுதியை நோக்கி நேற்று ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

நாவற்குழி முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினல் பொதுமக்கள் தரப்பில் ஒருவர் காயமடைந்தார். (ஒ)

## துப்பாக்கி பிரயோகத்துடன் துண்டுபிரசுரம்

யாழ்ப்பாணம்,வியா.

யாழ் நகரை நோக்கி நேற்று மாலை வந்த ஹெலிகாப்டரொன்று திடீரென நகர்ப் பகுதியை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதுடன் துண்டுப் பிரசுரங்களையும் வீசியது. (ஒ)

முகாம்களிலிருந்து

## வெளியேறியபடையினருடன் புலிகள் கடும் நேரடி மோதல்

யாழ்ப்பாணம், வியாழன்

''தொண்டமானாறு, மண்டான் பொலிகண்டி ஆகிய முகாம்களிலிருந்து வெளியேறிய பெருமளவு இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் இராணுவத் தரப்பில் பலர் கொல்லப்பட்டதுடன் பல காயமடைந்தனர்.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

''நேற்று தொண்டமானாறு, மண்டான், பொலிகண்டி ஆகிய முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்துக்கும் எம்மவர்க்குமிடையே கடு

(5-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறை

## 'லங்கா சிமெந்து லிமிட்டெட்டை' இயங்கவைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியா.

காங்கேசன்துறையிலுள்ள லங்கா சிமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையை மீண்டும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவருகின்றன.

இது தொடர்பாக பலாலி இராணுவ முகாம் இணைப்பதிகாரி பிரிகேடியர் ஜெரிசில்வாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு லங்கா சிமெந்து லிமிட்டெட் பொது முகாமையாளர் திரு. விஜயமானே இன்று கொழும்பிலிருந்து விமானமூலம் மூலம் பலாலி வரவுள்ளார்.

(5ம் பக்கம் பார்க்க)

ஆலய உற்சவம் தொடர்பாக

## ஆலோசனை நடத்த சென்றோர் அதிரடிப்படையால் எச்சரிக்கை

### பொதுமக்கள் 38 பேர் கைது

(நமது நிருபர்)

மட்டுநகர் தாந்தாமலை முருகன் ஆலய வருடாந்த உற்சவம் சம்பந்தமாக ஆலோசனை நடத்தச்சென்ற அவ்வாலய தர்மகர்த்தாசபையினரையும், பொதுமக்களையும் எச்சரித்து தடுத்து நிறுத்திய அதிரடிப் படையினர், பொதுமக்களில் 37 பேரையும் கைது செய்துள்ளனர்.

அதிரடிப்படையினரின்இந்த அச்சுறுத்தலைத் தொடர்ந்து தாந்தாமலை முருகன் ஆலய வருடாந்த உற்சவம் இம்முறை நடைபெறமாட்டாது என தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர்:

தமிழீழ விடுதலைப்புலிகளின்

[5ம் பக்கம் பார்க்க]

# "அரசின் கட்டுப்பாட்டுக்குள் யாழ்நகர் விரைவில் வரும்"

— 'லலித்'

[கொழும்பு]

''யாழ். நகர்ப்பகுதி விரைவில் அரசின் பூரணகட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும்'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் கூறினார்.

யாழ்ப்பாணப் பகுதியைக் கைப்பற்ற முடியாது போனல் இராணுவம் அப்பகுதியிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் கேட்டுக்கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (எ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பிடவை சீமாட்டி 531, பலாலி றோட், திருநெல்வேலி, யாழ். பல்கலைக்கழக அண்மையில் [சி9751]

பான்சி குட்ஸ் சீமாட்டி 158, நவீனசந்தை யாழ்ப்பாணம். [சி 9750]

Calbirds) இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு சீமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் றோட், மயிலன்காடு, சுன்னுகம். சி-9705

பியானோ, சொனிஸ் பீக்கர் பொக்ஸ் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு 47, விதானையார்வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். சி-9762

புத்தம் புதிய ஜெசிக்கா (F X 7) கமராவும் நஷனல் (Flash) தொடர்பு S. ஸ்ரீதரன் 41, ஜெயந்திமகால், சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு சி-9767

சிங்கர் Zig Zag தையல் மெஷின் தமிழ் தட்டச்சு யந்திரம் உடன் விற்பனைக்குண்டு 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். சி-9763

Broiler இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. K திருஅருட்சோதி, திருச்செல்வம் வீதி, பலாலி றோட், கோண்டாவில். (சி-9768)

சொனி 2020, பிலிப்ஸ் 17'' 14'' ரியூப், ரியூனர், பிளேபாக், சகல நாஷனல் வீடியோ டெக்கிற்குரிய உதிரிப்பாகங்கள், ICக்கள் என்பன விற்பனைக்கு உண்டு. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை), யாழ்ப்பாணம். சி-9716

பிரம்பு / சாதாரணகோல் செற்கள், பலவித அலுமாரிகள், கட்டில்கள், மேசைகள், Electric cooker with oven, Towel Rack, Book shelf, Ceiling fan, Easy chair, Mini Ice Cream Beater, Type writer, Water pump மற்றும் பல பொருள்கள் விற்பனைக்குண்டு. பத்மநாதன், பிறி மல்டி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. சி-9737

மூன்று மாதங்கள் கவனமாகப் பாவித்த புதிய 20'' கலர் TV Sony 2090, வாகனங்களுக்குரிய நஷனல் பன சோனிக்கசற் றேடியோ, சீலிங் Fan, பலவகை மெக்கானிக்கல் சாவிகள், 35 அறைகள் கொண்ட இரும்பு அலுமாரி விற்பனைக்குண்டு. சுவர்ணம்ஸ் றேட்ஸ் 44 K. K S. வீதி கொக்குவில். சி-9746

செட்ஹபாம் (BAB-Cock) B 380 பிரவுண் பேட்டு குஞ்சு, சேவல்குஞ்சு B 300 வெள்ளை பேட்டு குஞ்சு ரோஸ் புரோயிலர்ஸ் 28-07-87 லும் 31-7-87 லும் விநியோகிக்கப்படும். சொண்டு வெட்டித் தரப்படும். விலை பேடு 14-75 சேவல் 5-50. 14-7-87 க்கு முன் பணம் கொடுத்து பதிவு செய்யவும். விபரங்களுக்கு S. கிருஷ்ணமோகன், R. S K. பாம், முருகபதி, உடுவில் அல்லது கன்ஹ வீடியோசென்டர், மருதனமடம். சி-9749

## பயிற்சி

ரெலிவிஷன், வீடியோடெக் றிப்பியறிங் எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங் பயிற்சிகள் கூடியநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப் படும். ஆரம்பம் 13-07-87 Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, [றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். சி-9761

## விற்பனைக்கு

சகலவிதமான பாவித்த வீட்டுத் தளபாடங்கள் தேக்கு கட்டில், சோகேஸ் மெத்தைகள், அல்மாரி, தையல்மெஷின், கசற் றேடியோ, பித்தளைப் பொருள்கள், சாப்பாட்டு மேசை Rice Cooker, ஹோல் செற், Office மேசை, Dressing Table சாதாரண மேசைகள் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி-9764]

ஒகஸ்ட் 16-ம் திகதி நடைபெறவிருக்கும் உதவி ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி ''பொதுஅறிவு பொதுஉளச் சார்பு'' புதிய பதிப்பு 1984, 87 ஆண்டு வினு விடைத்தாள்களையும் உள்ளடக்கியது விலை ரூபா 49-50, பூபாலசிங்கம்புத்தகசாலை, சிறிலங்கா புத்தகசாலை, சுப்பிரமணியம் புத்தகசாலை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப் பெறவிரும்பின் அஸ்ரன்இன்ஸ்ரிரியூட் 101/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சி-9554

## தேவை

சிறியவீடு தேவை. கொக்குவில் திருநெல்வேலிப் பகுதியில் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்க: ஆ சிவராசா 6/2 கன்னதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். சி-9759

அனுபவம் உள்ள வானொலிப் பெட்டிகள் பழுது பார்க்கும் தொழில்நுட்ப வல்லுநர்கள் [Technicians] தேவை இவர்கள் காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரைக்குள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். ''ரெலிக் கோணர்'', நவீன சந்தை, சாவகச்சேரி. (சி—9765)

## வகுப்புக்கள்

108 Brown Road A/L 89 பொது இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் (10-07-87) வெள்ளி 5 p-m (செவ். வியா, வெள்ளி 5-00 p-m) சி-9747

Radio-TV, Air conditioning, Refrigeration, வயறிங், பிளம்பிங், மோட்ட மெக்கானிசம், வைன்டிங், தட்டெழுத்து-சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் செய்முறை பயிற்சியுடன் ஆரம்பமாகவுள்ளன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில்) 328, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். சி-9726

## 3-வது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் நிர்மலமுரளி

தொல்புரத்தில் வசிக்கும் சோதிராசா - குகானந்தியின் அன்புப் புதல்வன் ''நிர்மலமுரளி'' தனது மூன்ருவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகின்ருர்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, தீபன் அண்ணு, கௌரி அக்கா, சித்தப்பா, மாமன்மார், மாமிமார், பேபி அத்தை, சிவாஜினி, காயத்திரி, கனடா மாமா, சுவிஸ் சித்தப்பா, சித்தி, உறவினர், நண்பர்கள் சகல வளமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிருர்கள்.

[சி-9766]

## A/L 89 கணித மாணவர்கட்கு

திரு. வெக்டர் வேலாயுதம் ஆசிரியரினது தூய/பிரயோக கணித வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

11-07-87 காலை 10-30 Sat & Sun 10-30 — 12-30 மணல்தறை லேன், திருநெல்வேலி.

(சி-9656)

## வேலைக்கு ஆட்கள் தேவை

கண்ணுடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள

புளோவர் [Blowers]
கெல்பர் [Helpers]
பபுளர் [Bubblers]

போன்றவர்கள் உடனடியாகத் தேவை.

16—19 வயதிற்குமிடைப்பட்ட ஆண்கள் வேலைபழகுவதற்கும் தேவை.

உடன் விண்ணப்பிக்கவும்.

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்**
நீர்வேலி.

[சி-9696]

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் பிரபவ வருடம் ஆனித் திங்கள் 26-ம் நாள் (10-7-87) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி முதல் 10-15க்குள் வரும் மூலநக்ஷத்திரம் கூடிய சிம்மலக்கின சு முகூர்த்தத்தில்

திருநிறைசெல்வன் **மகாதேவனுக்கு** (முன்னுள் வர்த்தக வங்கி கொழும்பு) ★ திருநிறைசெல்வி **ரஜனியை**

திருமாங்கல்யதாரணம் செய்து கொடுப்பதாக நிச்சயித்து மேற்படி முகூர்த்தம் சென்னை வடபழனி கோவில் மண்டபத்தில் நடைபெறும். திருமணத்திற்கு சுற்றம்சூழ வந்திருந்து வாழ்த்தியருள வேண்டுகிருேம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்,

திரு. திருமதி C. V. I சாந்தா, (மணமகனின் பெற்றோர்) 2-C Park Plaza, 7 Cost Road, T Nagar, Madras-7.

திரு. திருமதி இராஜசேகரன், (மணமகளின் பெற்றோர்)

மு. இராமநாதஐயர், சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி. (எ-1903)

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு 5546 இலக்க வழக்கில் வாதி புன்னலைக்கட்டுவன் தெற்கு சிவசிதம்பரம் காந்திகுமாருக்கு விற்பனவு திகதிவரை போகவேண்டிய தீர்வைத் தொகை 4,000/- ரூபாவும் மேலும் இதில் 2,000/- ரூபாவுக்கு 24-4-1984 தொடக்கம் 20-12-1985 வரை வருடமொன்றுக்கு 24% வீத வட்டியும், அதன் பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்குவரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும், வழக்குச் செலவு 2907 ரூபா 70 சதமும் விற்பனவுச் சலார்களும் இதில் 17-2-1986ல் கொடுக்கப்பட்ட 4,000/- ரூபாகழித்து மிகுதித் தொகையைப் பிரதிவாதிகள் உடுவில் முருகன் நவரத்தினத்திடமும் பெண் மனேன்மணியிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தில் ஷெ வழக்கில் சம்பந்தப்பட்ட இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1987 ஞு ஜூலை மீ 28உ (28-7-1987) முற்பகல் பத்துமணி தொடக்கம் குறித்த இவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### குறித்த ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவில் இறை 'கொல்லனெல்லை'' நிலப்பரப்பு 2½ யில் மேற்குப்புறமாக அறுதி விற்கப்பட்ட நிலப்பரப்பு ½ நீக்கி மிகுதியாய் கிழக்குப் புறமாக இருக்கும் நிலப்பரப்பு இரண்டும் கிணறும் வீடும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை மேற்கு சின்னத்தம்பி கந்தையாவினுதனம் தெற்கு கந்தர் நாகலிங்கத்தினுதம் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

**வி. செ. குட்டிப்பிள்ளை**
விற்பனை ஆணையாளர்.

643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி- 9760)

## நதிகளின் நீர்மட்டம் அபாயநிலையில்

புதுடில்லி, ஜூலை-8

அஸாம் மாநிலத்தில் வெள்ள நிலைமை தொடர்ந்து மோசமடைந்துள்ளதாகவும், அங்குள்ள நதிகளில் நீர்மட்டம் அபாய எல்லையைத் தாண்டி விட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் வெள்ளம் காரணமாக 1500க்கு மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய சங்கம்

(மண்டைதீவு)

மண்டைதீவு மத்தியில் புதியகிராம அபிவிருத்திச்சங்கம் ஒன்று அண்மையில் தீவுப் பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் சடாற்சர சண்முகதாஸினுல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கடற்றொழிலாளர்களின் நலன்கருதி இப்புதிய கிராம அபிவிருத்திச் சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சங்கம் மண்டைதீவு மத்திய கிராம அபிவிருத்திச்சங்கம் என்ற பெயரில் இயங்கி வருகிறது.

## இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 25 (9-7-1987)
கிழமை: வியாழன்
திதி: திரயோதசி
நட்சத்திரம்: கேட்டை

மேடம்: புனைந்துரைகளால் மனதும் புண்படும். அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கலாம் பிறர் விடயத்தில் தலையிடாதிருக்கவும்.

இடபம்: வாழ்க்கைப் பூங்காவில் வசந்தம் வீசும். வணிகர்கள் வாழ்வும் வளமாகும். தனவரவுண்டாம்.

மிதுனம்: நினைவின் நிழலாட்டம் நிம்மதியைக் குலைக்கும். பயிர்ச்செய்கை பாதிக்கப்படும். நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும்.

கடகம்: நல்லதைச் செய்வீர்கள் நலன்பெருகும் மேலதிகாரிகளின் ஆதரவும் பலமாகவிருக்கும்.

சிங்கம்: மனம்போல் வாழ்வு மக்களால் மகிழ்ச்சி. கலைஞர்களும் போற்றப்படுவர்.

கன்னி: வாழ்வுப்பாதை சீராகும். கடமையிலும் நல்ல வருவாயுண்டு. சுபகாரியமும் இடம்பெறலாம்.

துலாம்: நண்பர்களாலும் தொல்லையுண்டு. வரவிலும் வீழ்ச்சி தென்படும். அவசர முடிவைத் தவிர்க்கவும்.

விருச்சிகம்: பணவிரையமாகலாம். குடும்பப்பிணி தலைதூக்கும். ஆணவப் போக்கினுல் அடியும் சறுக்கலாம். அவதானம் நன்று.

தனுசு: மாணவர்களுக்கு மகத்தானதினம் குடும்பச் சேர்க்கையுண்டு. குறிக்கோள் வெற்றியுண்டாம்.

மகரம்: அன்னியர் சகவாசம் ஆபத்தை ஏற்படுத்தும். உடல்நலமும் பாதிக்கப்படலாம் உறவுமுறைகளில்வெடிப்புகள் தோன்றும்.

கும்பம்: கடமையும் உயரும் கடன் தொல்லையும் பறக்கும். வாழ்விலும் புதிய தெம்பு பிறக்கும்.

மீனம்: வெற்றி உமது அருகில் விரைந்துவரும். புகழ் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள் பொறியியலாளர்க்குப் பொன்னுள்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## 24 மணி நேரத்தில் 2-வது கோரச்சம்பவம்

# சீக்கிய தீவிரவாதிகளால் ஹரியானுவிலும்

# 36 பஸ் பிரயாணிகள் படுகொலை!!

# ஒரேகுழுவினரே இரு கொலைகளுக்கும் காரணம்?

புதுடில்லி. ஜூலை 8

**சிக்கியத் தீவிரவாதிகள் கடந்த இரவும் 36 இந்து பஸ் பிரயாணிகளைப் பரிதாபகரமாகப் படுகொலை செய்துள்ளனர்.**

**கடந்த 24 மணி நேரத்தில் இடம்பெற்ற 2-வது படுகொலைச் சம்பவமான இது ஹரியாஹு மாநிலத்தில் பஞ்சாப் எல்லைக்கு அண்மையில் இரு பஸ்களில் நடைபெற்றுள்ளன.**

இச்சம்பவம் பற்றி அறிவிக்சப்பட்டுள்ளதாவது:

ஒரு டாக்ஸி, ஒரு டிரக், ஒரு ஜீப் ஆகியவற்றில் வந்த ஐந்து ஆயுதம் தாங்கிய சீககியத் தீவிரவாதிகள் ஹரியாஹு மாநிலத்திலுள்ள கிஷார் மாவட்டத்தில் புதுடில்லி செல்லும் நெடுஞ்சாலையில் வீதித் தடைகளைப்போட்டு ஹரியாஹுவிலிருந்து புதுடில்லி சென்ற அரச கூட்டுத்தாபனப் பஸ்ஸை மறித்துள்ளனர். பஸ் நின்றதும் உள்ளே ஏறிய தீவிரவாதிகள். பிரயாணிகளை நோக்கிக் கண்மூடித்தனமாகச் சுடத் தொடங்கினர். அப்போது எதிரே வந்த மற்றொரு டஸ்ஸைக் கண்ட தீவிரவாதிகள் திடீரென இறங்கி வீதித் தடையருகே நின்ற 2-வது பஸ்ஸிலும் ஏறிக்கண்டபடி சுட்டுத்தள்ளினர்.

இச்சம்பவத்தின்போது முதல் பஸ்ஸில் 4 பிரயாணிகளும் 2-வது பஸ்ஸிம் 32 பயணிகளும் கொல்லப்பட்டனர்.

### தெய்வாதீனமாக உயிர் தப்பினர்

முதல் பஸ்ஸிலிருந்து தீவிரவாதிகள் இறங்கி இரண்டாவது பஸ்ஸுக்குச் சென்ற போது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பஸ்ஸை விட்டு இறங்கி இருளோடு இருளாகத் தப்பி ஓடிய சுமார் 40 பிரயாணிகள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

### டாக்ஸி சாரதியும் கொலை

தீவிரவாதிகள் சம்பவம் நடைபெறும் இடத்திற்கு வருவதற்காகத் தாம் கடத்திய டாக்ஸிச் சாரதியையும் முதலில் கொலைசெய்துவிட்டே டாக்ஸியைக் கடத்தியுள்ளனர்

### தேடுதல் வேட்டையில் இராணுவம் பொலிஸ்

சம்பவத்தையடுத்து பொலிசாரும், இராணுவத்தினரும் தீவிரவாதிகளைத் தேடும்பணியில் உடனடியாக ஈடுபடுத்தப்பட்டனர்.

ஹரியாஹு-பஞ்சாப் எல்லைகள் மூடப்பட்டன. மூலை முடுக்குகளில் எல்லாம் தேடுதல் வேட்டை நடைபெறுகிறது.

### 2 படுகொலைகளுக்கும் ஒருகுழுவேகாரணம்

நேற்று முன்தினம் இரவு 40 பயணிகளைப் படுகொலைசெய்த தீவிரவாதக்குழுவினரே இக்கொலைகளையும் செய்துள்ளனர் என பொலிசார்நம்புகின்றனர்.

இதேவேளையில் ஹரியாஹு பஸ் போக்குவரத்து கூட்டுத்தாபனம் தனது சகல இரவு பஸ் சேவைகளையும் நிறுத்தியுள்ளது. ஹரியாஹுவில் சகல கல்லூரிகளுககும் விடுமுறை அறிவிக்கட்பட்டுள்ளது.

### மக்களின் உயிர் உடைமைகளைப் பாதுகாக்கவும்

இப்படுகொலைச் சம்பவங்களைக் கேள்வியுற்ற உள்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்ததோடு ஹரியாஹுவில் மக்களின்உயிருக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பளிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட மத்திய அரசு சகலஉதவிகளையும் வழங்கத்தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் மத்திய சூழல்துறை அமைச்சர் திரு. ஜன்லால் ஸ்தலத்திற்கு விரைந்துள்ளார்.

### மறியல் போராட்டம்

அதேவேளையில் இப்படுகொலைகளைக் கண்டித்து பஞ்சாப்பிலும் ஹரியாஹுவிலும் இன்று மறியல் போராட்டம் நடைபெறறு அரசியல் கட்சிகள், சமூகசேவை நிறுவனங்கள், சமயநிறுவனங்கள் இந்த மறியல்போராட்டத்தை ஏற்பாடுசெய்துள்ளன.

---

## 38 ஆண்டு கால இராணுவ ஆட்சி முடிவுக்கு வருகிறது

உலகச் செய்திகள்

### அமைச்சரவை பாராளுமன்றம் அங்கீகாரம்

தைபே, ஜூலை-8

தாய்வானில் 38 ஆண்டுகால இராணுவ ஆட்சிக்கு முற்றுப் புள்ளிவைப்பதென்று தாய்வான் அமைச்சரவையும், பாராளுமன்றமும் முடிவுசெய்துள்ளன.

இதுகுறித்து தாய்வான் அமைச்சரவையின் பாராளுமன்றம் அங்கீகரித்த பின் அத்தீர்மானம் அதிபரின் அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஒரு கோடியே, 91 ஆயிரம் மக்கள் தொகையைக்கொண்ட தாய்வானில் 19 9ம் ஆண்டு முதல் இராணுவ ஆட்சி நடைபெற்று வருவது குறப்பிடத்தக்கது. இங்கு வாழும் மக்களில் 98 வீதமானோர் சீனர்களாவர்.

---

## பெற்றோல் தாங்கி விபத்தில் 50 பேர் பலி!

பொன், ஜூலை-8

மேற்கு ஜெர்மனியின் நகரம் ஒன்றில் பெற்றோல் தாங்கி வாகனமொன்று விபத்துக்குள்ளாகி வெடித்துச் சிதறியதையடுத்து 50 பேர் பலியாகினர் என்றும் பலரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

விபத்துக்குள்ளான வாகனம் வெடித்துப் பெற்றோல் சிதறியதையடுத்து நகரம் முழுவதும் தீப்பிடித்து எரிந்ததாகவும் தீயை அணைக்கத் தீயணைப்புப் படையினர் நீண்ட நேரம் போராடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறு காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய அந்த வாகனத்தின் சாரதி, அவ்வாகனத்தின் 'பிரேக்'கில் திடீரென ஏற்பட்ட கோளாறே இவ் விபத்திற்குக் காரணமென்று கூறினர்.

---

## தெலுங்குதேசம் ஆதரவாளர் படுகொலை!

புதுடில்லி, ஜூலை 8

இந்திய தென் மாநிலமான ஆந்திரப்பிரதேசத்தில் கிராமமொன்றில் இடம் பெற்ற அரசியல் கலவரத்தில் தெலுங்கு தேச ஆதரவாளர் ஐவர் இந்திய காங்கிரஸ் ஆதரவாளர்களினுல் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹைதராபாத் நகரிலிருந்து 9 மைல் தூரமுள்ள கிராமமொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது சுமார் 500 இந்திய காங்கிரஸ் ஆதரவாளர்கள் அக்கிராமத்தைச் சுற்றிவளைத்து தெலுங்கு தேச ஆதரவாளர்களை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வீடொன்றுள்மறைந்திருந்த தெலுங்குதேச ஆதவாளர் ஐவரையும் பலமாக தாக்கியதில் நால்வர் ஸ்தலத்திலேயே பலியானுர்கள். ஒருவர் ஆஸ்பத்திரியில்மரணமானுர். (சி)

---

## இந்திய பாராளுமன்ற கூட்டம்

புதுடில்லி, ஜூலை-8

இந்தியப் பாராளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் இம்மாதம் 27ம் திகதி ஆரம்பமாகின்றது.

---

## யாஸிர் அரபாத் இந்தியா வருகிருர்

(புதுடில்லி)

பலஸ்தீனிய விடுதலை இயக்க தலைவர் யாஸிர் அரபாத் இரண்டுநாள் விஜயம் மேற்கொண்டு இமமாத பிற்பகுதியில் இந்தியா வருகிருர்.

மத்திய கிழக்கு நாடுகளின் சர்வதேச சமாதான மாநாட்டிற்கு அணிசேரா நாடுகளின் ஆதரவைத்தேடும் நோக்குடனே ஜனுப் அாபாத் இந்திய விஜயத்தை மேற்கொண்டுள்ளார்

இதன்போது இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை சந்தித்து பலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கான உலக ஆதரவு பற்றியும் பேச்சுக்கள் நடாத்துவார். (சி)

---

வளைகுடாவிலிருந்து

# அமெ.பிரி.பிரான்ஸ் கப்பல்கள் வெளியேறினுல் நாமும்தயார்

## சோவியத் மீண்டும் கூறுகிறது'

## மேலும் 3 யுத்த கப்பல்களையும் அனுப்புகிறது

மாஸ்கோ, ஜூலை-8

"வளைகுடாவிலிருந்து அமெரிக்க, பிரிட்டிஷ் பிரான்ஸ் போர்க் கப்பல்கள் வெளியேறும் பட்சத்தில் சோவியத் யூனியனும் தனது போர்க் கப்பல்களை வளைகுடாவிலிருந்து வாபஸ்பெறும்''.

இவ்வாறு சோவியத் வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

அமெரிக்க போர்க் கப்பல்கள் வளைகுடாவிலிருந்து வாபஸ்பெறும் பட்சத்தில் தனது போர்க் கப்பல்களையும் சோவியத்யூனியன் வெளியேற்றும் என ஏற்கனவே விடுக்கப்பட்ட அறிவிப்பையும் நினைவூட்டிய அந்த அதிகாரி, வளைகுடாவில் அமைதியை நிலைநாட்ட சோவியத் யூனியன் என்றுமே தயாராக இருக்கிறதென்றும் கூறினர்.

### வளைகுடாவை நோக்கி சோவியத் போர்க்கப்பல்கள்

இதேவேளையில் வளைகுடாவை நோக்கி மேலும் மூன்று சோவியத் கப்பல்கள் வந்துகொண்டிருப்பதாகக் 'குவெய்த்' பத்திரிகை ஒன்றுக்கு சோவியத் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

## ரூபா 60லட்சம் கஞ்சாவுடன் இளைஞர் கைது

சென்னை, ஜூலை-8

சென்னையில் 60 லட்சம் ரூபா (இந்திய நாயணம்) கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஞ்சாக் கடத்தலுக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் அந்த இளைஞரது மோட்டார் சைக்கிளையும் போதைவஸ்து தடுப்புப் பிரிவுப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்

### மணிவாக்கு

தன் உள்ளத்தைத் தூய நிலையில் வைத்துக் கொண்டு பிறரிடம் உள்ள குற்றங்களை அருட்கண்ணால் பார்க்கவேண்டும். அதற்குப் பெயர்தான் மனிதப் பண்பு.

— ராஜாஜி

## நமது நோக்கு

# இந்தியக் கப்பல் வருகையும் உள்ளூராட்சி தேர்தல்களும்!

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு இந்தியக் கப்பல்கள் நிவாரணப் பொருள்களைக் கொண்டு வருவது தொடர்பாக அரசாங்கக் கட்சியினருக்கிடையில் கருத்து மோதல்கள் உருவாகியுள்ளன.

நேற்று முன் தினம் நடைபெற்ற அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இதுபற்றிக் காரசாரமான விவாதம் நடந்துள்ளது.

பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா இந்தியக் கப்பல்கள் காங்கேசன்துறைக்குப் பொருள்களைக் கொண்டு வருவதுபற்றிக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார். வேறு பல பொதுக்கூட்டங்களிலும்கூட இந்த எதிர்ப்பினை அவர் வெளியிட்டு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அரசாங்கப் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் அவரது கருத்தையே பல உறுப்பினர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அதாவது இந்தியக் கப்பல்கள் யாழ் குடாநாட்டுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டுவந்து இறக்குவதற்கு இலங்கை அரசு அனுமதியளித்திருப்பதற்குப் பிரதமரின் தலைமையில் ஒரு பெருங் குழு ஆட்சேபம் கிளப்புகின்றது என்பதே பொருள்.

இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்று ஏற்கனவே செய்து கொள்ளப்பட்டிருப்பதால் நிவாரணப் பொருள்களைக் குடாநாட்டுக்கு அனுப்ப வேண்டாம் எனக் கோருவது பொருத்தமாக இராது என்பதால், கப்பல்கள் கொழும்புக்கு வரட்டும், கொழும்பிலிருந்து இரு தரப்பு ஏற்பாட்டின்மீது குடாநாட்டுக்குப் பொருள்களை அனுப்பிவைக்கலாம் என்பதாக அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்

குடாநாட்டுக்கு அவசரமாகவும் அவசியமாகவும் நிவாரணப் பொருள்கள் தேவைப்படுவதாக இந்தியா கருதியமையாலேயே காங்கேசன்துறைக்கு நேரடியாகக் கப்பல்களை அனுப்புவதற்கு முன்வந்தது. அந்த அடிப்படையிலேயே விமானங்கள் மூலமும் நிவாரணப் பொருள்களை இந்தியா இப்பிரதேசத்தில் போட்டுச் சென்றது. நிலைமையின் உக்கிரத்தன்மை குறைந்துவிட்டதாக இந்தியா கருதாத நிலையில், இங்கு நிவாரணப் பொருள்கள் அவசியமில்லையென இப்பிரதேச மக்கள் அறிவிக்காத நிலையில் நிவாரணப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்களைக் கொழும்புக்கு அனுப்பவும், அங்கிருந்து வேறு வாகனங்களில் அவைகளை இங்கு அனுப்பவும் இந்திய அரசு ஒத்துக்கொள்ளுமென்று எதிர்பார்க்க முடியாது. பொருள்கள் கொழும்பில் இறக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, வேறு வாகனங்களில் ஏற்றப்பட்டு, தடை முகாம்களில் தடுத்துச் சோதிக்கப்பட்டு, இவ்வாறாக இங்குவந்து சேர்வதாயின் வெகுகாலம் பிடிக்கும் என்பதுபோக, கொழும்புக்கு அனுப்புவதால் இப்பொருள்கள் உருப்படியாகக் குறிப்பிட்ட மக்களுக்குப் போய்ச் சேருமா என்பதிலும் சந்தேகம் உண்டு.

எதுவானாலும் இந்தியக் கப்பல்கள் நிவாரணப் பொருள்களுடன் குடாநாட்டுக்கு வந்துபோவதும், இந்திய தூதரக அதிகாரிகள் இங்கு வந்து போவதும், இந்திய செஞ்சிலுவைச்சங்கத்தினர் இங்கு தங்கியிருப்பதும் தென்னிலங்கையில் ஆளும் கட்சியினருக்குப் பெரும் தலையிடியைக் கொடுக்கின்றது. எதிர்க் கட்சிகள் இந்நிலைமையைத் தமக்கு சாதகமாக்கிப் பயன்படுத்திக்கொள்ளப் போகிறார்கள் என்ற பயமும் உருவாகியுள்ளது. எனவே, தவிர்க்கமுடியாத போதிலும் இந்தியா நிர்ப்பந்தமாக இப்பொருள்களை இங்கு கொண்டுவந்துசேர்க்கின்றது என்ற கருத்தை சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்த வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

அவ்வாறு செய்வதின் மூலம் பெரும்பான்மை மக்களின் ஆத்திரத்தை இந்தியாமீதும் இந்தியத் தலைவர்கள்மீதும் திசைதிருப்ப முடியும். அதன்மூலம்தமது தொகுதிகளில் கட்சியின் நிலைமையை ஸ்திரப்படுத்திக்கொள்ளமுடியும் என ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கருதுகிறார்கள் போலும். விரைவில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி, பிரதேச சபைகள் தேர்தல்களையொட்டி இப்படியான ஒரு பிரசாரம் அவர்களுக்கு கை கொடுக்கும் என்று கருதலாம்.

ஆளும்கட்சி உறுப்பினர்கள் (பிரதமர் உட்பட) பலர் இப்படியான கருத்துக்களை காரசாரமாக வெளியிட்டுள்ளபோதிலும், கப்பல்களை அனுப்பவேண்டாமென இந்திய அரசிடம் முறைப்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாக (இதனை நாம் எழுதிமுடிக்கும்வரை) தகவல் இல்லை.

அதேசமயம், ஏற்கனவே இரு நாடுகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்பாட்டின்படி "ஐலன்ட்பிறைட்" என்ற இந்தியக் கப்பல் சென்னைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுவிட்டதாக அகில இந்திய வானொலி அறிவித்துள்ளது. மேற்கொண்டும் மூன்று கப்பல்கள் இவ்வாறு நிவாரணப் பொருள்களை ஏற்றிவரும் எனவும் அவ்வறிவித்தல் கூறுகின்றது.

ஆக, அரசாங்கக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கை தொடர்பு சாதனங்களில் பெரிதுபடுத்தப்பட்ட அளவுக்கு நடைமுறையில்செயல்படுத்தப்படும் அறிகுறி தெரியவில்லை. ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும்கூட இந்திய உணவுப் பொருள்கள் வருவது குறித்து விருப்பம் தெரிவிக்காவிட்டாலும் கப்பல்களை இங்கு இந்தியா அனுப்பக்கூடாதென வெளிப்படையாகக் கூறியதாகத் தெரியவில்லை.

பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமரின் தலைமையில் பலத்த ஆட்சேபம் கிளம்பியுள்ள போதிலும், பத்திரிகை செய்திகளின்படி, தேசிய பாதுகாப்பு அமைச்சர் அங்கு பேசியபோது இந்தியக் கப்பல்களில் வரும் பொருள்கள் இலங்கை இராணுவத்தினால் சோதிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் அவைகள் பங்கீடு செய்யப்படுகின்றன என்பதை விளக்கியுள்ளார். இந்திய உணவுக்கப்பல்கள் வருவது குறித்து ஏனைய உறுப்பினர்களின் ஆட்சேபனைகளுக்கு ஆறுதல் கூறும் வகையிலேயே திரு. அத்துலத்முதலியின் விளக்கம் அமைந்துள்ளதாகக் கருதலாம்.

என்னவானாலும் இந்திய நிவாரணப் பொருள்கள் தொடர்ந்தும் கிடைக்க வேண்டும் என்றே இங்குள்ள மக்கள் விரும்புகின்றார்கள். அவை இங்கு வருவதற்கான உடன்பாட்டை இலங்கை அரசு அவசரப்பட்டு மீறமாட்டாது என்று கருதுகின்றோம்.

# இன்று நயினை நாகபூஷணி ரதோற்சவம்: வெளியூர் யாத்திரிகர்கள் தொகை தினமும் அதிகரிப்பு

சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று 9ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுகின்றது.

இந்த ஆலயத்தின் ரதோற்சவ விழாவில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்களின் போக்குவரத்து, சுகாதாரம், பாதுகாப்பு, நீர் வசதிகள் யாவும் ஆலய வீதிகளிலும் இறங்கு துறைகளிலும் செய்யப்பட்டிருக்கின்றன.

### சாரணர் தொண்டர்கள்

கோவிலடியிலும் இறங்கு துறைகளிலும் நயினாதீவு மகாவித்தியாலய சாரணர், சென்ஜோன் அம்புலன்ஸ் படைத் தொண்டர்கள் ஆலய தொண்டர்கள் ஆகியோர்களும் கடமைகளுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

**இ. சற்குருநாதன்**

யாத்திரிகர்களின் வசதி கருதி குறிக்காட்டுவான் இறங்குதுறையில் இரு மலசலகூடமும் ஆலய அயலில்30 மலசலகூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கான கிருமிநாசினிகளும் யாழ் கச்சேரியினால் வழங்கப்பட்டுள்ளன.

வழமை போல கோவில் அறங்காவலர் சபை நிர்வாகத்தினரும், ஞானவைரவர் கழகத்தினரும் கடற்பாதுகாப்பு சேவைகளை நடாத்தி வருகின்றனர்.

### இரவு பகல் அன்னதானம்

அமுதசுரபி அன்னதான சபையினர் கடந்த 7ம் திகதி முதல் பகல் இரவு என்று பாராது தொடர்ந்து கோவிலுக்கு வரும் யாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்கி வருகின்றனர்.

தற்பொழுது வெளியூர் யாத்திரிகர்கள் பெருமளவில் வருகைதர ஆரம்பித்துள்ளார்கள். இதன் காரணமாகவே தேர்த்திருவிழா மற்றும் தீர்த்தம் பூங்காவனத் திருவிழாக் காலங்களிலும் அதிகமாக வெளியூரிலிருந்து யாத்திரியர்கள் வருகை தரக்கூடுமாதலால் அவர்களின் வசதி கருதி பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### படகுகள் கட்டணம் குறைக்கப்பட்டது

தற்பொழுது குறிகாட்டுவான், நயினாதீவு படகுச் சேவைக்கட்டணமும் ரூபா ஐந்தில் இருந்து நாலு ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது.

குறிகாட்டுவான் இறங்கு துறையிலிருந்து நயினாதீவு செல்லும் யாத்திரிகர்களின் வசதிக்காக பல விசேட படகுகளும் சேவைக்கென அமர்த்தப்பட்டுள்ளன.

### அடையாள அட்டை

படகில் பிரயாணத்தை மேற்கொள்ளும் யாத்திரிகர்கள் ஒவ்வொருவரும் தங்களுடன் தங்கள் தேசிய அடையாள அட்டைகளைத் தவறாது எடுத்துச் செல்வது அவசியமானதாகும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடற்படையினர் கோவிலுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் ஒவ்வொருவரிடத்திலும் அவர்களின் தேசிய அடையாள அட்டைகளையும் பார்த்துவிட்டு அனுப்பி வைக்கிறார்கள்.

இதே நேரத்தில் பெண்கள் குழந்தைகள் வயோதிபர்களை படகில் இருந்து வெளியில் இறக்குவதில்லை. நடுத்தர வயதுடையவர்களையே வெளியில் இறக்கி சோதனை செய்து வருகிறார்கள்.

### அரசாங்க அலுவலகங்கள்

யாத்திரிகர்களின் வசதிகளைக் கருத்திற்கொண்டு வருடா வருடம் ஆலய மேற்கு வீதியில் அமைக்கப்பட்டுவரும் அரசாங்க அலுவலகங்களான நீதிமன்றம், உதவியரசாங்க அதிபர் காரியாலயம், அபிவிருத்திச் சபையின் உப அலுவலகம், வைத்தியசாலை, கிராமசேவையாளர் அலுவலகம் மற்றும் தொண்டர் ஸ்தாபனங்களின் அலுவலகங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் ஏதாவது அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் திருவிழாக்களை நடாத்தி முடிப்பதிலும் யாத்திரிகர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் யாழ் பொதுசனத் தொடர்புகள் அதிகாரியுமான திரு. த. குலசேகரமும், வேலணை உதவியரசாங்க அதிபரும் நேரடியாகக் கவனித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இருண்ட இல்லங்களுக்கு ஒளியூட்டும் நாகபூஷணி

நாம் அன்னையாய் வணங்கும் பொருள் அனைத்துயிர்களையும் ஆளும் சிற்சக்தியேயாகும். அவள் ஒருத்தியேயாயினும் பல திறப்பட்டவள். எத்தகை நுண்மதிக்கும், பரந்து விரிந்த பேரறிவிற்கும், அவளின் இயக்கத்தைப் பின்பற்றிச் செல்லும் ஆற்றல் கிடையாது. அன்னையின் நான்கு சக்திகளும் அவளுடைய விசேஷமான மூர்த்தங்களில் நான்காகும். இவற்றின் மூலமே அவள் தன் படைப்பகளிற் செயற்படுகின்றாள். அறிவு, ஆற்றல், அமைவு நிறைவு இவையே அம்மூர்த்தங்களின் சிறப்பான தன்மைகள். நாம் இவை நான்கிற்கும் மகேஸ்வரி, மகாகாளி, மகாலட்சுமி, மகாசரஸ்வதி என்ற நான்கு திருநாமங்களைச் சூட்டுகின்றோம். அன்னையின் உண்மையான கருணைக்கு தம்மை மலர்த்துவோரின் தெய்வ உன்னத நிலையின் அளவிற்கு ஏற்ப அவள் இவ்வுருவங்களின் வழியாக உதவுகின்றாள்.

அன்னையின் பொலிவுள்ள அம்சத்தை ஈடுபாட்டுடன் வழிபட்டுத் துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற் பதிப்போர்க்கு கலையாத கல்வி, குறையாத வயது, கபடுவராத நட்பு, குன்றாத வளமை, குன்றாத இளமை கழுபிணியியலாத உடல், சலியாத மனம், அன்பு அகலாத மனைவி, தவறாத சந்தானம், தாழாத கீர்த்தி, மாறாத வார்த்தை, தடைகள் வராத கொடை, குறையாத நிதி கோணாத கோல், துன்பமில்லாத வாழ்வு துய்ய அன்னையின் திருவடியில் அன்பு ஆகிய பதினாறுபேறும் கிடைக்கும்.

நயினை நாகபூஷணி கோயில் தோற்றம் பற்றிய காவிய வரலாறுகளும் கர்ண பரம்பரைக் கதைகளும் அநேகம் உண்டு. மணிமேகலையில் கூறப்படுவதே ஆலயத்தின் தோற்றமாக இருக்குமென்பது அநேகரின் நம்பிக்கை முப்பத்து இரண்டு தர்மங்களுக்கும் முதல்வியாகிய பராசக்தியினது இருக்கையாகிய புவனேஸ்வரி பீடம் என்று சொல்லப்படுகின்ற சக்திபீடத்தைத் தரிசித்துப் பழம்பிறப்பை உணர்ந்தவளாகிய மணிமேகலைத் தீவதிலகை கோமுகி என்ற பொய்கைக்கு அழைத்துச் சென்றாள். அதனை வலம்வந்து வணங்கி நின்றபோது அப்பொய்கையில் இருந்து அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரம் வந்ததைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தாள்.

**க. யோகநாதன்**

அமுதசுரபி பற்றியவேறொரு செய்தி உண்டு. ஆபுத்திரன் என்பான் அமுதசுரபிகொண்டு பசிப்பிணிபோக்கினான். அவன் புண்ணிய மிகுதியில் பெருமை கொண்ட இந்திரன்கோபத்தால் மணிபல்லவத் தீவாகிய நயினாதீவை அடைந்தான். அங்கிருந்த கோமுகி பொய்கையில் அமுதசுரபியை விட்டு ஆபுத்திரன் உயிர் துறந்தான்.

ஆபுத்திரன்உயிர் நீத்தநயினாதீவில் புவனேஸ்வரி பீடம் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக மணிமேகலை வாயிலாற்றால் அறியமுடிகிறது.

இவ்வாறு மணிமேகலையில் குறிக்கப்பெறும் நயினாதீவு பற்

(5ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

[மாவிட்டபுரம் நிருபர்]

பலாலி முகாமிலிருந்து நேற்று நண்பகல் முதல் தொடர்ச்சியாக ஏழாலை, குப்பிளான், ஊரங்குணை ஆகிய பகுதிகளை நோக்கி 'ஷெல்' தாக்குதல் இடம்பெற்றது.

## இலங்கையின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தூதரக பாதுகாப்பு ஆலோசகர் காப்டன் குப்தாவுக்கு ஏற்பட்ட அனுபவங்களே மேற்கண்ட முடிவை எம்மைஎடுக்க வைத்தது என்றும் கூறிய திரு. டிக்ஸிற் மேலும்கூறியதாவது:

மட்டக்களப்புபகுதிமருத்துவமனை ஒன்றில் சிகிச்சைபெறும் மக்களைச்சென்று பார்வையிடுவதற்கு எமது அதிகாரி விரும்பிய போது இலங்கை அதிகாரிகள் தாமும் அவருடன் செல்ல வேண்டுமெனக் கட்டாயப்படுத்தினர். இந்தக்கட்டுப்பாடு காரணமாக எமது அதிகாரி ஆஸ்பத்திரிக்குச் செல்லாமலேயே கொழும்பு திரும்பிவிட்டார் சம்பவம் நடைபெற்ற இடமான காளிமடு பிள்ளையார் ஆலயத்திற்கு காப்டன் குப்தா அழைத்துச் செல்லப்பட்டபோது கூட அவருக்கு முன் 50பேர்சென்றனர்.

அங்கு இரண்டு, மூன்று உள்ளூர் மக்களையே காப்டன் குப்தா சந்திக்க முடிந்தது. அந்த இரண்டு மூன்று பேரும் தமிழில் கூறியதை இலங்கை இரகசியப் பொலிஸ் அதிகாரி ஒருவரே மொழிபெயர்த்தார்.

## இருண்ட

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றியும் நாகபூஷணி கோவில் பற்றியும் கர்ண பரம்பரைக் கதைகள் வழங்கின்றன. இவற்றுள் ஒரு கதையில் கல்வெட்டொன்றை ஆதாரமாகக் கொண்ட பதினையிரம் வருடப் பழமை நயினதீவுக்கு உண்டென்று நம்பப்படுகின்றது.

நாகபூஷணியைப் பூசிக்கக் கடல் மார்க்கமாகப் பாம்பொன்று செல்கின்றது. அதனைக்கருடன் ஒன்று தொடர்கிறது. கடல் வாணிபம் செய்யும் வாணிகன் ஒருவன் பாம்புக்கு உதவுகின்றான். அம்பாளின் அருளினால் அவ்வணிகன் சிறப்புற்று ஆலயம்அமைத்து வழிபட்டு நலமுற்றான் என்பது அக் கர்ண பரம்பரைக் கதையின் சுருக்கமாகும்.

1955ம் ஆண்டு இவ்வாலயத்தில் வழிபட்ட திருமுருககிருபானந்தவாரியார் அம்பிகையின் திருவுரும் இன்ன காலத்தில் அமைக்கப்பட்டதென நிட்சயிக்க முடியாத பழமை உடையது வழிபட்டார்களின் வல்வினைகளை ஒருங்கே நீக்கி வரங்கள் அருளவல்ல வரதமுடையது என்று கூறிமகிழ்ந்துள்ளார்.

நயினதீவின் வட கீழ்த் திசையில் வேப்பமரச் சோலையில் அமைந்துள்ள ஆலயத்தில் இருந்து வழிபட்டோருக்குத் தடையேதும் இல்லாத அருளும் நாகபூஷணியின் திருவருளைச் சொற்களால் வருணிக்க இயலாது.

திருமணமாகி மகப்பேற்று இல்லாதவர் நாகம்மாளை வழிபட்டால் மகப்பேறு நிட்சயம் கிடைக்கும். ஆயிரமாயிரம் குழந்தைகள்அன்னையின் கருணையால் பிறந்து இருண்ட இல்லங்களுச்கு ஒளியூட்டியுள்ளனர். அன்னையின் கடைக்கண்பார்வை கிடைத்தால் அனைத்து இன்பமும்பெறுவது திண்ணம்.

## இடமாற்றம் ரத்து

ஒட்டுசுட்டான் நிருபர்

முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சு. விவகலாலா வின் மன்னார் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## இராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் துடிதுடித்துப்பலியானார்கள் என்று சம்பவத்தை நேரில் பார்த்தோர் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தின் இந்நடவடிக்கைகளினால் மன்னாரில் நேற்று பெரும் பதற்றம் நிலவியது. (ஒ-எ)

## பூரி மீண்டும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இது இவ்வாறிருக்க யாழ் குடாநாட்டு மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு மேலும் மூன்று கப்பல்கள் சென்னை துறைமுகத்திலிருந்து யாழ் குடாநாடு நோக்கிப் புறப்படவுள்ளன என்று இந்திய உணவுக் கழகத்தின் மேலாளர் திரு. எம். ஜி. கே. மூர்த்தி கூறினார்.

'ஐலண்ட் பிரைட்' கப்பலில் வரும் 3-வது தொகுதி உணவுப் பொருள்களுடன் இதுவரை 2,100 தொன் பொருள்களை இந்தியா யாழ். மக்களுக்கு அனுப்பியுள்ளது.

## எரிபொருள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விலைகுறைப்புத்தொடர்பாக பெற்றோலிய கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையானர் திரு. சிவஞானம் பெற்றோலிய கூட்டுத்தாபன விநியோகஸ்தர்களுடன் ஆலோசனைக்கூட்டமொன்றை நேற்று நடத்தியிருந்தார்.

போக்குவரத்து சேவையின் இன்றைய நிலையினையும் தமிழ் மக்களின் இக்கட்டான சூழ்நிலையையும் கருத்தில்கொண்டு எரிபொருள்களின் விலையைக் குறைப்பதென எரிபொருள் விநியோகஸ்தர்களினால் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி இன்று முதல் ஒரு லீற்றர் மண்ணெண்ணை ஒன்பது ரூபாவாகவும், ஒரு லீற்றர் டீசல் பதினொரு ரூபாவாகவும், ஒரு லீற்றர் சுப்பபெற்றோல் பதினேழு ரூபாவாகவும் விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது. (வா)

## ஆலய உற்சவம்

(1ம்பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தள பதி திரு. குமரப்பாவின் ஆலோசனையின்படி நிதிதிரட்டிக் கொடுப்பதற்காகவா இங்கு உற்சவம் நடத்த வந்தீர்கள் என்று பொதுமக்களைப்பயமுறுத்தியஅதிரடிப்படையினர் கைது செய்தவர்களை மகாஓயா 19ம்கட்டை முகாமுக்குக் கொண்டுசென்று தடுத்துவைத்துள்ளனர்.

இதேவேளை இந்து ஆலயங்களில் குண்டுகளை வீசியும், முகாம்கள் அமைத்தும் சமயாசாரத்துக்குமுரணாகவும்நடந்து வரும்அரசஆயுதப்படையினர், ஆலய வழிபாட்டுக்குச் செல்லும் பக்தர்களையும் கொலை செய்வதும், கைதுசெய்துவருவதும் வழக்கமாகிவிட்டதுஎன்று இந்துசமயப்பிரமுகர்கள் கண்டனமும், கவலையும்தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். [மா]


## யாழ். கலை மன்றம்

கலைமன்ற மாணவிகள் அனைவரும் வெள்ளிக்கிழமை (10-07-87) மாலை 3-30மணிதொடக்கம் 5-30மணிவரை வழமைபோல் வகுப்புகள் நடக்கும் இடத்திற்கு தவறாது சமூகம் தரவும்.

திருமதி யோகானந்தம்

[சி-9770]


# அதிபர் சிவராசாவின் மறைவு கல்வித்துறைக்கு பேரிழப்பு

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

[மாவிட்டபுரம்]

"அப்பாவிமக்களின் உடமைகள் உயிர்கள்மீது கைவைத்து இன்று கல்வித்துறையில் பணிபுரியும் கல்விமான்களின் மீதும் கைவைக்குமளவுக்கு நிலைமை முற்றிவிட்டது. கல்வியில் கைவைக்க இடமளித்தால் இனமே அழியும் நிலை உருவாகும் என்பதை நாம்மறந்துவிடலாகாது. மேலும் நிலைமை மோசமாகாமல் இருக்க நாம் வீறுகொண்டு எழவேண்டும்"

இவ்வாறு வீமன்காமம் மகா வித்தியாலய அதிபரும், அப்பகுதி பிரஜைகள் குழு பிரமுகருமான திரு எம். சிவராசாவின் மறைவையொட்டி மல்லாகம் இந்துக் கல்லூரியில் நடந்த அஞ்சலி வைபவத்தில் கலந்துரையாற்றிய யாழ். பல்கலைக்கழகஉபவேந்தர் கலாநிதி சு. வித்தியனேந்தன் கூறினார்.

மல்லாகம் இந்துக்கல்லூரி அதிபர் திரு. மகாதேவன் தலைமையில் இவ்வஞ்சலி வைபவம் நடந்தது.

கலாநிதி வித்தியானந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது -

"காலஞ்சென்ற அதிபரின் மரணத்துற்காக இங்கு நாம் அஞ்சலி செலுத்துவதோ, அவரின் பெருமைகளைப்பேசுவதோ எவ்வித பயனையும் தராது. இந்நிலை தொடராமல் இருகக என்ன செய்யலம் என நாம் சிந்திக்கவேண்டும். இவரது மரணம் வீரமரணம் என சிலர் கூறினார்கள். ஆனால் அப்படி அல்ல. கோழைத்தனமாக இராணுவம் அத்துமீறி நடத்திய கொடூரமான கொலையாகும்.

1974ம் ஆண்டு தமிழாராய்ச்சி மகாநாட்டு படுகொலை தான் இன்றைய புரட்சிக்குக் காரணமாகஅமைந்தது. அதன் பின்பே விடுதலை வீரர்களும் தோன்றினார்கள். இவ்வாறு படுகொலைகள் தொடர நாம் இனியும் இடமளிக்கக்கூடாது இக்கொலை குறித்து முடிந்தளவில்நான் சகல மட்டத்திலும் எடுத்துக்கூறி வாதாடத்தயாராக இருக்கிறேன். எக்கஷ்டத்தை எதிர்நோக்கவும்தயாராக இருக்கிறேன்" என்றார்.

யாழ். கல்விப் பணிப்பாளர் ஜனப் எம். மன்சூர் பேசுகையில் கூறியதாவது;

காலஞ்சென்ற அதிபர் தமது சேவைநேரத்திலேயே மரணத்தைத் தழுவியுள்ளார். கடமையே கண்ணாய் இருந்த இவரது மறைவு கல்வித் துறைக்கு பெரியதோர் இழப்பை உண்டு பண்ணியுள்ளது. இப்படியான நிலை தொடர்ந்தும் ஏற்படாதிருக்க மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பேன் அத்துடன் ஆசிரியர்கள், மாணவர்கள இது விடயத்தை சர்வதேச மட்டத்தில் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும்" என்றார்.

திரு. சொக்கன் பேசுகையில் கூறியதாவது;

கல்வியில்முன்னின்று உழைப்பவர்கள் ஆசிரியர்கள் அதிபர்கள் அவ்வாறான சமுதாயத்தை ஒருபோதும் அழித்தொழிக்க முடியாது கல்வியில் ஏற்படும்அழிவே முடிவுக்கு வழி என நாம் கொள்ள வேண்டும் என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி பேசுகையில்;

இன்று பல்வேறு வகையில் கொலை, கொள்ளை கற்பழிப்பு என கஷ்டங்கள் தொடர்ந்து கொண்டே உள்ளன ஆனால் இதைக்கேட்டு தப்பியோடுகிறோமே தவிர அதைத்தடுக்கும் திராணி இல்லாதிருக்கிறது. இந்த அதிபரின் கொலை இக்கட்டான சூழ் நிலையில் தமிழினம் கையாலாகாத நிலையில் உள்ளது என்பதை உணர்த்தியுள்ளது. இனியும் இப்படியான நிலைக்கு வழிவிடலாகாது என்றார்.

பேராசிரியர் திரு. சந்திரசேகரம் பேசுகையில்; இனத்துவேசத்தின் களப்பலியாக அதிபர் சிவராசாவை இழந்துள்ளோம். மாணவர்கள் அதிபருக்கு அஞ்சலி செலுத்துவது வழக்கம் ஆனால் நான் எனது மாணவரான சிவராசாவுக்கு அஞ்சலி செலுத்த நேர்ந்ததையிட்டு பெரிதும் கவலையுற வேண்டியுள்ளது. என்றார்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு எஸ். சிவமகாராசா பேசுகையில்:

வலிவடக்குப் பகுதியில் ஏற்பட்ட உயிரிழப்புகள் பற்றி விபரம் சேகரித்துவந்த அதிபர் சிவராசா 141பேர் இராணுவ நடவடிக்கையால் கொலை செய்யப்பட்டார் என அவர் சுடப்படுவதற்கு முதல்நாள் பட்டியல் தயாரித்துக் கந்தார். அவர் 142வது ஆளாக மரணமடைவார் என நாம் நினைக்கவில்லை அவரது சேவையை நாம் என்றும் மறக்கமுடியாது" என்றார்.

மற்றும் பலர் அஞ்சலி உரையாற்றினர்.

பல்வேறு நிறுவனங்கள் சமூகசேவை ஸ்தாபனங்கள் கல்விக்கூடங்கள், பொதுமக்கள் சார்பில் அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டதுடன் மலர் வளையங்களும் சாத்தி அஞ்சலி செலுத்தப்பட்டது. [வா-அ]

## முகாம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மையான நேரடி மோதல்கள் இடம்பெற்றன. நேற்றுக்காலை மண்டான் இராணுவமுகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தை எம்மவர்கள் 500யார் தூரத்தினுள்வைத்து வழிமறித்துத் தாக்கி அவர்களை முகாம் திரும்பச்செய்தனர்.

"இதேபோல தொண்டமனாறு முகாமிலிருந்து வெளியேறிய இராணுவம் வல்லை நாற்சந்திக்கு அருகில் வைத்து எம்மால்வழிமறித்துத் தாக்கப்பட்டு முகாமுக்குப் பின்வாங்கச்செய்யப்பட்டது.

"மேலும் பொலிகண்டிமுகாமிலிருந்து திக்கம் நோக்கி முன்னேற முயன்ற இராணுவமும் வழிமறித்து எம்மால் தாக்கப்பட்டது. இந்நேரடி மோதல்களின்போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், படுகாயமும் அடைந்துள்ளனர். ஹெல்மட்டுக்கள், கிரனேட்டுக்கள், ரவைகள் என்பனவும் எம்மால் கைப்பற்றப்பட்டன.

கடந்த இரு நாட்களாக இடம்பெற்ற நேரடி மோதலில் எமது தரப்பில் நரேஸ், தியாகு, மகான், வசந்தன் ஆகியோர் வீரமரணம் அடைந்தனர். இவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்".

## நயினை உற்சவம்: காலை 6 மணிமுதல் படகு சேவை

யாழ்ப்பாணம், வியா.

நயினை நாகபூஷணிஅம்பாள் இன்று காலை ஒன்பது மணியளவில் தேரில் வீதிவலம்வருவார்.

தேர்த் திருவிழாவுக்கு செல்லும் பக்தர் வசதிக்காக இன்று காலை 6மணி முதல் தொடர்ச்சியாக குறிக்காட்டுவானுக்கும் நயினதீவுக்கும் படகு சேவை நடைபெறவுள்ளது.

இப்படகு சேவையைப் பயன்படுத்தத்தக்க வகையில் வ. பி. போ. ச பஸ் சேவைகளும் நடைபெறவுள்ளன. (ப)

## காங்கேசன்துறை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காங்கேசன்துறைப் பகுதியில் அண்மையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து லிமிட்டெட் ஆகிய இரண்டு தொழிற்சாலைகளும் கடந்த பல மாதங்களாக இயங்காத நிலையில் உள்ளன. இதனால் அங்கு கடமை புரிந்து வந்த ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பாதிப்புற்ற நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. [வா]


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க




வடமராட்சிக்கு அண்மையில் விஜயம் செய்த வவனியா விகாராதிபதியும், வன்னி சமாதானக் குழுத் தலைவருமான வண. சீயம்பல கஸ்வவ விமலசாரதேரோ மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சென்று ஷெல் தாக்குதலினால் காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் சிறுவன் ஒருவனை பார்வையிடுகின்றார். அருகில் காணப்படுபவர் அனுராதபுரம் சர்வோதய வெளிக்கள இயக்குநர் ஹர்ஷா குமார நவரட்ண.

(படம்: வவனியா நிருபர்)

பாதிக்கப்பட்டவர்களுக்கு------

# ஆறு நிலையங்களில் இந்திய உணவுப்பொருள்

(அச்சுவேலி நிருபர்)

அச்சுவேலி, வளலாய், இடைக்காடு பத்தமேனி, தம்பாலை பகுதியில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறு நிலையங்களில் வைத்து இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கோப்பாய் மகாவித்தியாலயம், கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி, நீர்வேலி சீ. சீ. த க. பாடசாலையில் வைத்து 4ம் 5ம் திகதிகளில் உணவுப் பொருள்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் வைத்து 456 குடும்பங்களுக்கும், கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியில் வைத்து 170 குடும்பங்களுக்கும், நீர்வேலி சீ சீ. த. க. பாடசாலையில் வைத்து 450 குடும்பங்களுக்கும் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

6ம், 7ம் திகதிகளில் ஆவரங்கால் ஸ்ரீ நடராச இராமலிங்க வித்தியாசாலை, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, சிறுப்பிட்டி சைவத் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் வைத்து முறையே 1300, 1400 800 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

உணவுப் பொருள்கள் விநியோகத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் திரு. சௌத்திரி மற்றும் இலங்கை யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் அச்சுவேலி, பத்தைமேனி பிரஜைகள் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு உணவு விநியோகத்தை மேற்பார்வை செய்தனர்.

தையிட்டி மண்ணில் தழைத்து தருக்கர் வேட்டுக்கு பலியாகிய எமது அங்கத்தவர்களின்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அ. லங்கேஸ்வரன்
தோற்றம்: 21-06-1968
மறைவு: 23-04-1987



சி. ரவிச்சந்திரன்
தோற்றம்: 02-03-1961
மறைவு: 08-06-1987



மு. சற்குணநாதன்
தோற்றம்: 23--7-1958
மறைவு: 8-6-1987



செ. திருவேந்தனுர்
தோற்றம்; 05-11-1966
மறைவு: 8-06-1987

எங்கள் பூமியில் எதிரிகளின் சுவடுகள்
ஆழமாய்ப் பதிந்த அந்த வேளையில்
பொங்கும் வெறிகொள் வீரர் வேட்டுக்கு
எங்கும் ஒன்ருய் உலவுந் தோழர்
இதயத்திற் கலந்த இனிய நண்பர்
இரவிச்சந்திரனும் இணை சற்குணமிருவரும்
இலக்காய் இடச்சு வீதியில் வீழ்ந்தார்
இளையோர் வரிசையில் திருவாய் வந்த
சளையா வேந்தனும் பலியாய்ப் போனுன்
பழிதீர் பண்பின் இலங்கேஸ்வரனும்
துறைமுக யமதூதர்கள் கையில்
துடிக்கத் துடிக்கச் சாவை அணைத்தான்
மடியா இலட்சிய வேங்கை கொண்ட
மறவர் நால்வர் மண்ணுட் புதைத்தனர்,
மக்கள் பணியிற் தம்மை இணைத்த
மாண்புறுமவர்களை விதைத்தோம் நாங்கள்
விதைகள் நாளை வீருேடு முளைக்கும்
விழுமிய தையிட்டி மண்ணில் நாளை
தாழ்விலாப் பணிகள் தலைநிமிர்ந்தாற்றும்.

ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்

பராசக்தி சனசமூக
நிலையமும்
விளையாட்டுக்
கழகமும்

[சி 9752]

## சங்கானையில் கண்நோய்

(பலாலி)

சங்கானைப் பகுதியில் மிக வேகமாகக் கண் நோய் பரவுகிறது

இந்நோய் மிகக் கூடுதலாக இப்பகுதிகளில் இருக்கும் அகதி முகாம்களில் பரவியிருப்பது காணக்கூடியதாக இருக்கிறது,

தினமும் இப்பகுதியிலிருந்து இந்த நோயால் பீடிக்கப்பட்டவர்கள் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் கிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## படகு விபத்து பலியானோ 198 பேர்!

லுசாக்கா, ஜூலை-8

ஸாம்பியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் இறந்தோர் தொகை 198 ஆக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

காணமற்போன 200 பேரையும் தேடும் பணி தொடர்ந்து நடக்கிறது.

## கொழும்புத்துறையில் உண்ணுவிரதம்

[கொழும்புத்துறை நிருபர்]

தமிழ ஈழப் போராட்டத்தின் வெற்றிகரமான முடிவுக்காகவும், போராளிகளின் மன உறுதியையும், வீரத்தையும் பலப்படுத்தவும், மக்களிடையே நிலவும் மனநிம்மதியின்மையைப் போக்கவும் இதுவரை காலமும் தமிழ்த்தாய் மண்ணுக்காய்த் தம்முயிரை அர்ப்பணித்த சகல போராளிகளினதும் ஆத்மசாந்திக்கு வேண்டியும் கொழும்புத்துறை தாய்மார்களால் உண்ணுவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இவ் உண்ணுவிரதம் நடைபெற்றது.

## முதல்வருட நினைவஞ்சலி



திருமதி
துரைச்சாமி
சிவகாமிஅம்மா
தோற்றம்: 13-4-1915
மறைவு; 19 - 6 - 1986
திதி: 9-7-1987

அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்து எமக்கு நல்வழி காட்டிய எங்கள் அன்புத்தெய்வம் எம்மைவிட்டு மறைந்து ஒருவருடம் சென்ருலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிருேம். அன்புடன் நினைவு கூரும்:

மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்ருர், உறவினர்கள்.
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். ஏ-1902

# திரிபோஷாமாவுக்கு தட்டுப்பாடு

பண்டத்தரிப்பு, புதன்

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் கிளினிக்குகளுக்கு வழங்கும் திரிபோஷ மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

போஷாக்கு குறைந்த சிறுவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் இந்த திரிபோஷ மா இலவசமாக வழங்கப்பட்டு வந்தது.

கையிருப்பு முடிந்து விட்டதால் கடந்த ஒருமாத காலமாக இந்த மா வழங்கப்படவில்லை இதனுல் தாய்மார்களும் சிறவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடலிலிருந்து------

# பீரங்கித்தாக்குதல் மக்கள் வெளியேற்றம்

(புங்குடுதீவு நிருபர்)

நெடுந்தீவு கடற்பகுதியிலிருந்து கடந்த சனிக்கிழமை காலை திடீரென பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அப்பகுதிக் கடலில் நடமாடித் திரிந்த கடற்படைக் கப்பலொன்று இத் தாக்குதலில் ஈடுபட்டிருந்தது தெரியவந்துள்ளது.

மேலும் சுமார் ஒரு மணித்தியாலமாக மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இந்த திடீர் பீரங்கித் தாக்குதல்களினுல் அப்பகுதிக் கடற்கரையோரங்களில் வாடி அமைத்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த கடற்றொழிலாளர் குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களைத்தேடி ஊர்மனைக்குள் சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

புலமைப்பரிசில் பரீட்சை:------

# மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், சனி

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கு முன்பான போட்டிப் பரீட்சை ஒன்றை காரைநகர் பாடசாலை மாணவர்களுக்கிடையே வாரிவளவு நல்லியக்கசபை எதிர்வரும் 12ம் திகதி நடாத்தவுள்ளது.

இப்போட்டிப் பரீட்சையில் ஆகக்கூடுதலான புள்ளிகளை பெறும் முதல் ஐந்து மாணவர்களுக்கும் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும். இம் மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையிலும் சித்திபெறின் பரிசு இரண்டு மடங்காக வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ள .

மேற்படி பரீட்சைகள் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்திலும், யாழ்ற்றன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. (சி)

# இடப்பெயர்ந்தவர்களுக்கு உதவ யாழ். லயன்ஸ் திட்டம்

## புதிய தலைவர் 'விக்கி' கூறுகிருர்

யாழ்ப்பாணம். வியா

யாழ்ப்பாண மாவட்டத்தில் வன்செயல்களினுல் இடம் பெயர்ந்துள்ள மக்களின் நல்வாழ்வுக்காக அவர்களுக்கு தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு யாழ்ப்பாண லயன்ஸ்கழகம் பல திட்டங்களை வகுத்துவருகின்றது. இதற்கான நிதிவசதிகளை சர்வதேச சமூகத்திடமிருந்து நன்கொடையாக பெறுவதற்கு முழுவொன்றுப் முழுமூச்சாக இயங்குகிறது.

யாழ் லயன்ஸ்கழகத்தின் இவ்வாண்டுக்கான புதியதலைவரும் தொழிலதிபருமான லயன் கே. விக்கினராஜா இத்தகவலைத் தெரிவித்தார். யாழ் சுபாஸ் விடுதியில் நடைபெற்ற யாழ் லயன்ஸ்கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

கடந்தஆண்டு எமதுபகுதியில் நிலவிய நிச்சயமற்ற தன்மையால் எமதுகழகம் பேதிய சேவைகளை செய்யமுடியாமல் போய்விட்டது. அக்கால கட்டத்தில் நானே எமது முன்னைய தலைவரோ ஷெல் தாக்குதல்களுக்கும் பொம்பர் குண்டு வீச்சுக்கும் பாதுகாப்புத்தேடி ஓடவேண்டிய சூழ்நிலை இருந்தது. இன்று இந் நிலைமாறி வருகின்றது எதிர்காலத்தில் ஒவ்வொருவருக்கும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு பாரிய பொறுப்பு காத்திருக்கிறது. இக்காலகட்டத்தில் தமிழ் பிரதேசங்களில் அமைந்திருக்கும் லயன்ஸ் கழகங்கள் செயல் ஊக்கதிட்டங்களிலும் மற்றைய துயர்துடைப்பு பணிகளிலும் ஈடுபடவேண்டிய கடமையுண்டு. இவ்வாண்டு எமது வேலைத்திட்டம் ஐந்தம்சஅடிப்படையில் நடைபெறும்.

தேசிய ஐக்கியத்தை கட்டி வளர்த்தல், ஊனமுற்றவர்களுக்கு வாழ்வளித்தல், இளைஞர்களுக்கு சுயதொழில் பயிற்சியளித்தல், இடம் பெயர்ந்தோர்க்கு நலவாழ்வழித்தல், கழக அங்கத்தவர்களை அதிகரித்து சேவையாற்றல் ஆகிய நல் நோக்கங்களை கழகம் செயல்படுத்தவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட லயன்ஸ்கழக ஆளுனரும் யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரி அதிபருமான லயன் கே. இராஜேந்திரா பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் "சர்வதேச நாடுகளில் யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்துக்கு தனிக் கௌரவமுண்டு என்ருர்.

புதிய கழகநிர்வாகிகளுக்கு பதவிப்பிரமாணங்களை மூத்த உறுப்பினர் லயன் எல் சபாரத்தினம் செய்துவைத்தார். இவ்வைபவத்தில் புதிய தலைவராக லயன் கே.விக்கினராஜாவும், செயலாளராக லயன் எஸ். கணேசும் பிரதிச் செயலாளர்காக லயன் ஈ எம். டி. மார்தரும் லயன் என் வர்ணேந்திரனும் லயன் வி. யோகநாதனும் பொருளாளராக லயன் சி. மகேசனும் தெரிவாகினர். (கை)

## புனரமைப்பு

மண்டைதீவு, புதன்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு பாரதி மன்ற சன சமூக நிலையத்தினர் மக்களின் நலன் கருதி இங்குள்ள நன்நீர் கிணறு ஒன்றை சிரமதான மூலம் புனரமைப்புச் செய்துள்ளனர்.

### பாதிக்கப்பட்டவர்களுக்கு——

# உணவுப்பொருள்கள் சங்கங்களில் இல்லையாம்

(அச்சுவேலி, நிருபர்)

சுன்னுகம் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருள்களை பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் பெற்றுக்கொள்வதற்கான அனுமதிக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனுலும் அவர்கள் குறிப்பிட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லையாம்.

அனுமதிக் கட்டளைகளை கொண்டு செல்லும் மக்களுக்கு வழங்குவதற்கான உணவுப் பொருள்கள் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் கையிருப்பில் இல்லை என முகாமையாளர்கள் தெரிவிப்பதால் சில தினங்களாக பொதுமக்கள் கடைகளுக்கு அலைந்து திரிகின்றனர்.

### யாழ்ப்பாணம் சென்ற——

# 'பொடிபுத்தாவை' காணவில்லை குடும்பத்தினர் பொலிஸில் புகார்!

(கொழும்பு)

ஊர்காவற்றுறை தொகுதியில் இடைத் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்துவதற்காக யாழ்ப்பாணம் சென்ற, முன்னுள் நிக்கவரெட்டிய எம். பி திரு. முதியான்சே தென்னக்கோனை காணவில்லையென்றும் அவரை கண்டுபிடித்து உதவுமாறும் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் சென்ற திரு. தென்னக்கோனிடமிருந்து தகவலெதுவும் கிடைச்காததையடுத்தே அவர் குடும்பத்தினர் பொலிஸில் புகார் செய்து அவரை கண்டுபிடிக்க உதவுமாறும் கேட்டுள்ளனர்.

திரு. தென்னக்கோன் பற்றி கொழும்பு வட்டாரங்களில் குடும்பத்தவர்கள் விசாரித்தபோதிலும் தங்களுக்கு எதுவும் தெரியாதென சம்பந்தப்பட்டவர்கள் கைவிரிக்கிருர்களாம். (சி)

# சங்கீத நாடக ஆசிரியர்களின் சேவைக்காலப் பயிற்சி

[பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட பாடசாலைகளில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இவ்வருடத்திற்கான சேவைக்கால பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்கான ஒழுங்குகளை யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் செய்துள்ளார்.

வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மானிப்பாய் ஆகிய கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த சங்கீதம் கற்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு இம்மாதம் 13.ம் 14ம் திகதிகளில் சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது சங்கீதக் கல்விஅதிகாரி திரு சு. கணபதிப்பிள்ளை தலைமையில் இந்த சேவைகால பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

உடுப்பிட்டி பருத்தித்துறை சாவகச்சேரி ஆகிய கல்வி வட்டாரங்களை சேர்ந்த சங்கீத ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 15ம், 16ம் திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை யாழ் மாவட்டத்தை சேர்ந்த சகல வட்டாரப்பாடசாலைகளைச்சேர்ந்த நடன ஆசிரியர்களுக்குமான சேவைக்கால பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 13ம், 14ம் திகதிகளில் சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறுமென்று இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

# அகதிகளுக்கு சிறுவர் பாடசாலை

பண்டத்தரிப்பு, புதன் சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு சங்கானை கலாசார மண்டபம், சங்கானை கிராம நீதிமன்ற கட்டிடம் ஆகிய இடங்களில் தங்கியுள்ள அகதிகள்குடும்பங்களின் நலன்கருதி சிறுவர் பாடசாலை ஒன்றை அங்கு ஆரம்பித்துள்ளது.

இந்த சிறுவர் பாடசாலைக்கு ஆசிரியை ஒருவரை சர்வோதய இயக்கம் நியமித்துக் கொடுத்துள்ளது.

# மீண்டும் ஆங்கில வகுப்பு

[யாழ்ப்பாணம்]

நாட்டின் சூழ்நிலை காரணமாகச் சிறிது காலம் தடைப்பட்டிருந்தவார இறுதி ஆங்கில வகுப்புக்கள், இம்மாதம் 11-ம் திகதிமுதல் மீண்டும் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும் என வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார்.

ICMA (Stage I)

WEEKEND CLASSES

ECONOMICS Mr. S. Kathi.gamanathan
LAW Mr. Eugene Mariammpillai
Q M Popular Varsity Lecturer
ACCOUNTS Mr. S. P Sivapathasundaram
Fees Only Rs. 950/- (Part payments accepted)

ALSO IDPM, AAT & IAB

ENROL EARLY

CANTABIA INSTITUTE
(Shoot of Oxonia, Colombo
13, Rasavinthodam Lane,
(ஸ்ரான்லி ரேட் முடிவுக்கருகாமையில்)
JAFFNA. [ஏ 1901]

# மன்னார் செய்திகள்

## மீண்டும் வறுமை நிவாரணம்

வறுமை நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இரண்டாவது சுற்றுவட்டத்தில் தகுதி பெற்ற குடும்பங்களுக்கு மீண்டும் மன்னார் உதவி அரசாங்கஅதிபர் பிரிவில் உணவு முத்திரைகள் வழங்கப்படுகின்றன. 11 கிராம சேவை அலுவலர்கள் முத்திரைகளை விநியோகம் செய்து வருகின்றனர்.

## இரவும் பஸ்சேவை

மன்னாரில் சேவையிலீடுபடும் பஸ்கள் இரவு தங்கி மறுநாள் காலையில் அதே இடத்திலிருந்து போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்துள்ளது. தலைமன்னார், எருக்கலம்பிட்டி, பண்டிவிரிச்சான், மாதா கிராமம், முருங்கன் போன்ற இடங்களுக்கான சேவைகள் இப்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கான பணிப்புரைகளை மாவட்ட இ.போ.ச. இணைப்பு அதிகாரி எம். ஏ. கபூர் மேற்கொண்டிருந்தார்.

## வாக்காளர் இடாப்பு திருத்தம்

மன்னார் மாவட்டத்தில் 1987-ம் ஆண்டு வாக்காளர் இடாப்பு திருத்த வேலைகள் இப்பொழுது துரிதமாகநடைபெற்று வருகின்றது.

18 வயது பூர்த்தி அடைந்த சகல இலங்கையர்களும் இதில் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென பிரிவு கிராமசேவை அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று கடமையாற்றிவருகின்றனர்.

## பிரதம அதிதி

மன்னார் சென் சேவியர் மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியம் நடத்திய விருந்துபசார வைபவத்தில் பிரதம அதிதியாக மன்னார் சிறுவர்பராமரிப்பு பாதுகாப்பு நிலையத்தின் மாவட்டபிரதிநிதி திரு.பொ. சண்முகராசா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இன்றைய உலகில் மாணவர்களின் பங்களிப்பை பற்றி எடுத்துக்கூறிய அவர் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக சிறுவர்கள் திகழ வேண்டுமென்றூர். இவ்வைபவத்துக்கு பாடசாலை அதிபர் தலைமைதாங்கினூர்.

## கி. ேச. அ. பிரிவு அதிகரிப்பு

மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏற்கனவே பதினெரு கிராம சேவை அலுவலர் பிரிவுகள் இருந்துவந்தன. ஆனுல் தற்சமயம் உள்ள விசேட சேவை உத்தியோகத்தர்கள் பதவிமாற்றம் செய்யப்பட்டு கிராமசேவை அலுவலர்களாகநியமிக்கப்பட்டமையால் மேலும் பதினெரு கிராம சேவை அலுவலர்கள் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## உலக தரிசனம் கடன் உதவி

நானுட்டான் உதவி அரசாங்க அதிபரின் பிரிவிலுள்ள வங்காலை, நானுட்டான், முருங்கன் அளவக்கை, புத்திரகண்டான் போன்றகிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு உலக தரிசனம், கோழி வளர்த்தல், உப உணவுப் பயிர்ச் செய்தல் போன்ற தொழில்களுக்குக் கடன் வசதிகள் அளித்துள்ளது.

3000 ரூபா முதல் 7500 ரூபா வரையிலான இக்கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதனை நானுட்டான் பகுதிக் கிராம அபிவிருத்தி அதிகாரி திரு எம். அருளப்பு மேற்பார்வையிட்டு வருகின்றூர்.

## வரட்சி நிவாரணம்

மன்னாரில் தற்சமயம் மழையின்றி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் பயிர்கள் கருசிக்கொண்டு வருகின்றன இதனுல் விவசாயிகள் பெரிதும் பாதிப்புற்று வருகின்றனர்.

அரச அதிபர் ஜனுப் எம் எம். மக்பூல் சமூகசேவை அமைச்சுடன் தொடர்பு கொண்டு வரட்சியால் பாதிக்கப்பட்ட உயிலங்குளம், நொச்சிக்குளம், கள்ளிக்கட்டைக்காடு, பறுப்பாங்கண்டல், நறுவிலுக்குளம், வங்காலை, நானுட்டான் போன்ற கிராமங்களுக்கு வரட்சி நிவாரணத்தை வழங்க ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளார்.

# சேவைக்கொரு சிவராஜா



தூங்காமை, கல்வி, துணிவுடமை ஆகிய தலைமைப் பண்புக்குரிய கூறுகளைத் தம் மகத்தே கொண்டு சென்றவிடமெல்லம் சேவைக்கொரு சிகரமாக மிளிர்ந்த அதிபர் முத்தையா சிவராஜா இன்று எம்மிடையே இல்லை. வேலியே பயிரை மேய்ந்துவிட்ட நிலையில் இனிய நண்பன் சிவராஜாவை கல்வியுலகு இழந்துவிட்டது. காங்கேசன்துறை வட்டார அதிபர்களுள் ஒருவராகிய செ. வரதராசப்பெருமாள் துப்பாக்கிக் குண்டுப்குப் பலிகொடுத்த மாவிட்டபுரம், அதிபர் சிவராஜாவையும் குண்டுக்கு இரையாக்கிவிட்டது. மாணவருடைய கல்விக்காகத் தமது உயிரையே காணிக்கையாகத் தந்தோர் பட்டியல் சிவராஜா அவர்களுடன் முற்றுப்பெற இனி ஒரு விதிசெய்வோம். அதை எந்தநாளும் காப்போம்.

பட்டப்படிப்பு முடிந்தபின்னர் கொழும்பிலே சில காலம் கடமையாற்றிய பின் பரமேஸ்வராக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையேற்றூர். அன்று முதல் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான இனிய நண்பராக அவர் விளங்கினூர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் சிறிது காலம் கற்பித்த பின்னர் அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கு அவர் மாற்றம்பெற்று வந்தார். அக்காலத்தில் யான் காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அலுவலராகக் கடமையாற்றினேன். அப்போது எமது தொடர்பு மீண்டும் வலுப்பெற்றது. வட்டாரப் பணிகள் அனைத்திலும் திரு. சிவராசா எனக்கு உறுதுணையாக நின்று பணியாற்றினூர்.

1980ஆம் ஆண்டு கல்விவள நிலையம் என்ற நிறுவனம் அமைக்கப்பட்டபோது அதற்கு மிகவும் பொருத்தமானவர் அவரே என்று எண்ணி அவரை அதன் பொறுப்பு அலுவலராக நியமித்தேன். கல்விவள நிலையங்களுக்கு முன்னேடியாக வழிகாட்டும் வகையில் ஆசிரியரும், மாணவரும் பெரும் பயன் பெறும்படி அவர் பல்வகை நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்தார்.

வீமன்காமம் மகா வித்தியாலயத்துக்கு ஆற்றல் வாய்ந்த அதிபர் ஒருவர் தேவைப்பட்டபோது அவரையே நான்தெரிவு செய்தேன். ஆனுல் அவர் கல்விவள நிலையத்தின் மூலம் சிறந்த சேவையாற்ற முடியும் என்றெண்ணினூர். எனினும் எனது வலியுறுத்தல் காரணமாக அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். வித்தியாலய நிறுவனர் குடும்பத்தினர்என்ற வகையில் அவருக்கு ஊரவரின் பேராதரவு கிடைத்தது. அந்த ஆதரவை ஒன்றுதிரட்டிக் குறுகிய காலத்தில் வித்தியாலயத்தின் பெருவளர்ச்சிக்குக் காரணமாயமைந்தார்.

காங்கேசன்துறை வட்டாரக் கல்வி மரபைப் பதிவுசெய்துள்ள 'காங்கேயன் கல்வி மலர்' சிறப்பாக மலர அயராது பணி ஆற்றியவர்களுள் திரு. சிவராஜா முதன்மையாகக் குறிப்பிடத் தகுந்தவர். கல்வி டிப்ளோமா எம். ஏ. ஆகிய பட்டங்களைப் பெற்றுச் சிறந்த கல்விமானுக அவர் விளங்கினூர்.

கல்விச் சேவையில் மட்டுமன்றி ஏனைய சமூகப்பணிகளிலும் அவர் அயராது உழைத்தார். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் வரிசையில் சேவைக்கொருவராக வாழ்ந்த சுவராஜாவின் பூதவுடலைக் குண்டு சிதைத்துவிடலாம். ஆனுல், அவரது புகழுடல் சமூகத்தில் என்றும் நிலைத்திருக்கும்.

பொ. சிவஞானசுந்தரம்

# ரதோற்சவம்

(உடுவில் நிருபர்)

உடுவில் சிவஞானப்பிள்ளையார் ஆலய இரதோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவஞானவாரியம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திய ஆத்திசூடி மனனப் போட்டியில் தகுதி பெற்றோருக்கு தேர்த்திருவிழாவன்று தொழிலதிபர் திரு க. கனகராசாவினுல் பரிசுகள் வழங்கப்படவுள்ளது.

மேற்படி ஆலயத்தில் கடந்த அறுபது ஆண்டுகளாக சேவகம் செய்துவந்த நாதஸ்வர இசைக்கலைஞர் திரு.என்.ஆர். கோவிந்தசாமிப்பிள்ளைக்கு அன்றையதினம் பாராட்டு விழா நடாத்தி அவரது சேவையை கௌரவிக்கவும் சிவஞானவாரியம் ஒழுங்கு செய்துள்ளது வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

# தகவல் தாருங்கள்

இன்றைய அசாதாரணநிலைமைகளினுல் உறவினர்களுடன் தொடர்பு கொள்ள முடியாது துன்பமுறும் பொதுமக்களுக்கென "தகவல தாருங்கள்" என்ற தலைப்பில் இலவசமாக 'ஈழநாடு' சேவையொன்றை ஆரம்பிக்கின்றது. தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ள அல்லது அவர்கள் பற்றிய விபரம் அறிய விரும்புகிறவர்கள் அது பற்றி சுருக்கமாக எழுதி முழு முகவரியுடன் 'ஈழநாடு' ஆசிரியருக்கு அனுப்பிவைக்கலாம். நம்பகமானவைமட்டும் பிரசுரிக்கப்படும். ஆ-ர்]

## உறவினர் எங்கே!

அல்வாய் தெற்கு சி. த. மார்க்கண்டு உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர், கச்சேரி, யாழ்ப்பாணம். ஆகிய நானகொழும்பில்இருந்து திரும்பிவந்து இளைப்பாறி காணி அலுவலகர் என். இராமலிங்கம் வெள்ளம் போக்கட்டி, கச்சாய் கொடிகாமம் என்னும் விலாசத்தில் தங்கியிருக்கின்றேன் நான் எனது குடும்பத்தினர் எங்கே தஞ்சம் புகுந்து தங்கியுள்ளார்கள் என்பதைஅறிய ஆவலாகவுள்ளேன். தயவு செய்து விபரம் தெரிந்தவர்கள் உடன் எனக்கு அறியத்தரவும்.

சி. த. மார்க்கண்டு
உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர்,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 9-7-87

# வடமராட்சியை உங்கள் வசம் தொடர்ந்து வைத்திருக்க முடியுமா?

## — சபையில் லக்ஷ்மன் ஜெயக்கொடி

(நமது நிருபர்)

"வடமராட்சியை நீங்கள் கைப்பற்றியிருந்தால் தொடர்ந்து அதனை உங்கள் வசம் வைத்திருக்க முடியுமா? அதற்கான தகுதி உங்களிடம் இருக்கிறதா? தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதனை நிறுத்தி வைக்கும்படியி வெளியிலிருந்து வற்புறுத்தல்கள் வராதா? இவற்றுக்கு எந்த வகையான தீர்வை எடுக்கப் போகிறீர்கள் என்று விரைவில் முடிவுகாண வேண்டும்."

இவ்வாறு அத்தனகல எம்.பி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி (சிறீலங்கா சுதந்திரக் கட்சி) பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் அரச தரப்பினரைப் பார்த்துக் கேட்டார்.

பாதுகாப்புச் செலவினங்களுக்காக 185 கோடி ரூபா குறைநிரப்பாக ஒதுக்குததற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இப்பிரேரணைமீது திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி உரை நிகழ்த்தினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்: 'ஒபரேசன் லிபரேசன்' மூலம் கைப்பற்றப்பட்ட வடமராட்சியை தீவிரவாதிகள் மீண்டும் தாக்கியுள்ளதால் எமது படையினரின் பலம் அங்கு போதாதென்றே சொல்ல முடியும் அத்துடன் தீவிரவாதிகளின் மனோநிலை மாறவில்லை என்றும் தெரிகிறது என்றார்.

### வடமராட்சி படிப்பினையை கவனிக்கவேண்டும்

இரு தினங்களுக்கு முன்னர் வடமராட்சி தீவிரவாதிகளால் தாக்கப்பட்ட பின்னர் பலவிடயங்களைக் கவனிக்கவேண்டியிருக்கிறது என்று தெரிவித்த திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி வடமராட்சி எமக்குப் படிப்பித்துள்ள பாடத்தையும் நாம் கவனிக்கத் தவறக் கூடாது என்று எச்சரித்தார்.

இனப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வு, அரசியல் தீர்வு ரீதியான தீர்வு காணப்பட வேண்டும் என்றெல்லாம் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் மக்களின் மனதை வென்றெடுக்காது எதனையும் சாதிக்க முடியாது. மக்களின் மனதை வென்றெடுக்க ஜனநாயக அடிப்படை ஸ்திரப்படுத்தப்பட வேண்டும்."

இராணுவத் தாக்குதல்களை நிறுத்துவதாக முடிவு செய்தால் படையினரை மட்டும் அங்கு ஏன் வைத்திருக்க வேண்டும்.

"1984ல்தீவிரவாதிகளைஒழிப்பதற்கு தம்மிடம் சரியான திட்டம் இருப்பதாக அமைச்சர் லலித் தெரிவித்திருந்தார். அதனை அவர் நடைமுறைப்படுத்த அனுமதிக்கப்பட்டாரா? அதனைத் தடுத்தது யார்?

இந்தியாவின் மத்தியஸ்த உதவி அவசியம் என்று வெளிவிவகார அமைச்சர் இந்தியாவில் தெரிவித்துள்ளார். இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வே காணப்படும்என்று நிதிஅமைச்சர் சொல்லியிருக்கிறார்.

இனப்பிரச்னைக்கு எவ்வகையான தீர்வு காணவேண்டும் என்று திட்டவட்டமாகமுடிவு செய்யவேண்டும். அதன்படி நாம் இராணுவ நடவடிக்கைகளைக்கைவிடுவதாக இருந்தால் பாதுகாப்புக்காக அதிகளவு பணத்தை ஏன் செலவுசெய்ய வேண்டும்.

எனவே பாதுகாப்புக்காக அதிகபணத்தைச் செலவிடுவது சம்பந்தமாக அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும்" என்றும் திரு ஜெயக்கொடி கேட்டுக்கொண்டார். [மா]

---

## விமானப் படைத் தளபதி சென்னை விஜயம்

[சென்னை]

இந்தியவிமானப்படைத் தலைவர் "எயர் மார்ஷல் சீஃப்" டி. லஃபன்டைன் நேற்று சென்னைக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஆவடி விமானத் தளத்திலுள்ள இராணுவ சாதனங்களையும் ஏற்பாடுகளையும் பார்வையிட்டதுடன் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திவிட்டு புதுடில்லி திரும்பினார்.

ஆவடி விமானப்படைத் தளத்தின் தளபதி எயர் கொமடோர் சத்பதி விமானப் படைத் தலைவரை வரவேற்று தளபாட நிலையங்களைக்காண்பித்தார்.

---

## பத்திரங்கள் வந்துள்ளன

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதியில் தட்டுப்பாடான நிலையிலிருந்த பிறப்பு இறப்புப் பதிவுக்கான பத்திரங்கள் தற்போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன

வடபகுதி அனைத்துமுள்ள 65 பதிவாளர்களுக்கும் இது வரையும் பதியப்படாதிருந்த பிறப்பு இறப்பு பதிவுகளை பதிவதற்கான ஏற்பாடுகளை உடன் மேற்கொள்வதற்காக அதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள காரியாலயத்திற்கு வருமாறு யாழ்ப்பாணம் பதிவாளர் அறிவித்துள்ளார். (கு)

---

## கிராம சேவை அலுவலர்கள் சேவை பயிற்சி

மண்டைதீவு, திங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் விசேட சேவை அலுவலர்களாகக் கடமையாற்றி கிராம சேவை அலுவலர்களாகப் பதவி மாற்றம் பெற்றவர்களுக்கான சேவைப்பயிற்சி இம் மாதம் 14, 15, 16ம் திகதிகளில் யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி முடிவடைந்த பின் காலியான கிராமசேவை அலுவலகர் வெற்றிடங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

---

## துப்பாக்கிச் சூட்டில் மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

இக்னேஷியஸ் இராசதுரை (வயது 55) பாங்சால் வீதி, கந்தன் வள்ளி (வயது-66) குருநகர், லில்லி ஜெயராசா (வயது-55) மார்ட்டீன் வீதி ஆகிய மூவருமே இராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளாவர். [கு]

---

## அகில உலக இராமாயண மாநாடு

(ரொரன்ரோ)

அகில உலக இராமாயண மாநாடு இன்று 9ம் திகதியிலிருந்து 12ம் திகதி வரை கனடாவில் ரொரன்ரோ நகரில் நடைபெறுகின்றது. கனேடிய இந்து கவுன்சிலின் ஆதரவில் நடைபெறும் இம்மாநாட்டின் முதல் மாநாடு அயோத்தியாவிலும் இரண்டாவது மாநாடு தாய்லாந்தில் பேங்கொக் நகரிலும் இடம்பெற்றன. இப்போது நடைபெறுவது மூன்றுவது மாநாடாகும்.

---

## நிவாரணப் பொருள்கள்

(அராலி நிருபர்)

வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராமசேவை அலுவலர்கள் மூலமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டன

வழங்கப்பட்ட படிவங்களில் குடுப்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கைக்கேற்ப பெறுமதிக்கு அந்தந்தக் கிராமசேவை அலுவலர்கள் மூலமாக அத்தாட்சிச் சீட்டு வழங்கப்பட்டு சங்கானை ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளிலுள்ள உத்தரவுபெற்ற தனியார் கடைகளில் கூப்பனுள்ளவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலமே உணவுப்பொருள்கள் வழங்கப்படுகின்றன.

---

## தஞ்சாவூர் மாவட்டத்தில் 5266 இலங்கைதமிழ் அகதிகள்

[சென்னை]

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாத்திரம் 5,266 இலங்கைத் தமிழ் அகதிகள் பல முகாம்களிலும் தங்கியிருப்பதாக தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராமு தஞ்சையில் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மாதம் 15ம் திகதி வரை தஞ்சாவூரில் 1,133 குடும்பங்களைச் சேர்ந்த 4 006 இலங்கைத் தமிழ் அகதிகள் இருந்தனர். அடுத்த பதினைந்து நாட்களில் 607 குடும்பங்களைச் சேர்ந்த 1,260 அகதிகள் வந்து சேர்ந்தனர். தற்போது மாவட்டத்திலுள்ள அகதிகளின் பிள்ளைகள் கல்வி கற்பதற்குத்தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றார். [சி]

---

## தென்மராட்சியில் 5 ஆயிரம் மக்கள் தஞ்சம்

[அலுவலக நிருபர்]

வடமராட்சிப் பகுதியிலிருந்து சுமார் ஐயாயிரத்திற்குமதிகமான மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து கால் நடையாகவும், சைக்கிள்களிலும் தென்மராட்சிப் பகுதியை வந்தடைந்த இவர்கள் இங்குள்ள பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூகநிலையங்கள் போன்ற பொது ஸ்தாபனங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களில் காலி பூஸாமுகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டு விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களும் அடங்குவர்.

இதேவேளை வடமராட்சிப் பகுதியெங்கும் இரு ஹெலிக்கொப்டர்கள் சுற்றி வட்டமிட்டு ஷெல்தாக்குதல்களையும் 50 ஹலிபர் தாக்குதல்களையும் நடத்தியவண்ணமுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [ஒ]

---

## மண்டைதீவு முகாமிலிருந்து ஷெல் குண்டு தாக்குதல் மக்கள் கல்லூரியில் தஞ்சம்

யாழ்ப்பாணம், வியா.

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து நேற்று குருநகர் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக 'ஷெல்' குண்டுகள் ஏவப்பட்டன.

நேற்று பகல் 11 மணியளவில் திடீரென குருநகர் பகுதியை நோக்கி மண்டைதீவிலிருந்து ஷெல் குண்டுகள் ஏவப்பட்டதினால் அச்சமடைந்த பொதுமக்கள் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் தஞ்சமடைந்தனர்.

மேற்படி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் குருநகர் கருவாட்டுவாடிப் பகுதிகளிலும், சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயப் பகுதிகளிலும் விழுந்து சேதங்களை ஏற்படுத்தின.

இதேவேளை அண்மையில் பீரங்கிக் குண்டு தாக்குதலினால் சேதமடைந்த சென் ஜேம்ஸ் வித்தியாலயம் இது வரை இயங்காமல் இருந்து வருவது தெரிந்ததே.

மேற்படி வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவர் தற்போது, பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் கல்விகற்று வருவது குறிப்பிடத்தக்கது. (வி)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜுலை மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036 81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.

---

## தங்கக் கடத்தல் முறியடிப்பு

[சென்னை]

இலங்கையிலிருந்து திருச்சி சென்றஒருவரிடமிருந்து சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான 12 தங்கக் கட்டிகளை திருச்சி சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர். (சி)

---

## அலஸ் விசாரணைக்கமிஷன் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

யாழ். ஆஸ்பத்திரி மீது கோட்டை இராணுவத்தினர் நடத்திய ஷெல் தாக்குதல் தொடர்பான அலஸ் விசாரணைக்கமிஷன் கொழும்பு தேசிய பாதுகாப்பு அமைச்சு கட்டிடத்தில் தனது விசாரணையை இன்று காலை பத்து மணிக்கு ஆரம்பிக்கிறது.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் நச்சினார்க்கினியன் இவ்விசாரணைக் கமிஷன் முன் முதலாவது சாட்சியாக ஆஜராகின்றார். (ஒ)

---

## பெண்களிடமிருந்து சுதந்திர உணர்வு பிறக்க வேண்டும்" -மன்னார் உ.அ. அதிபர்

(மன்னார்)

1983ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை மன்னாரில் பனைவள அபிவிருத்திச்சபைமூலம் பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் மன்னார்பிரிவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. வே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

பனைவள அபிவித்திச்சபை வெளிக்கள அலுவலர் திரு. மு. நல்லகுமார் தோட்டக்காடு கிராமசேவை அலுவலர் திரு. எஸ். இசைடீன், பேசாலை கிராமசேவை அலுவலர் திரு. இ ஜே. ஜே. மிராண்டா ஆகியோருடன் 25க்கு மேற்பட்ட பயிற்சிபெற்ற ஆசிரியைகள் கலந்துகொண்டனர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. வே. சண்முகநாதன் பேசுகையில்; "பெண்களிடமிருந்துதான் சுதந்திர உணர்வு பிறக்கவேண்டுமெனவும் காந்தியின் கொள்கைப்படி உள்ளூர் மூலப் பொருள்களுக்கு முதலிடம் கொடுத்து உற்பத்தியை பெருக்கவேண்டுமெனவும் தெரிவித்தார். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தங்களை அறிமுகம்செய்துவிட்டு தங்களின் பிரச்னைகளை எடுத்துக் கூறினார்கள். முக்கியமாக பனம்பொருள்களிலிருந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட கூடைகள்: தொப்பிகள், பூக்கள் போன்றவற்றை சந்தைப்படுத்த வசதி இல்லையென்று கவலை தெரிவித்தனர். இதற்குப் பதிலாகப் பேசிய அரசாங்க அதிபர் உடனடியாக மன்னாரில் ஓர் மத்திய விற்பனை நிலையத்தை ஏற்படுத்தி பொருள்களை சந்தைப்படுத்துவதாக உறுதியளித்தார். (மா)